Registered as a Newspaper

# உதயன்

www.uthayan.com

விலை ரூபா 8.00

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 26 சனிக்கிழமை (08-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:165

லண்டனிலிருந்து வந்திறங்கிய கையோடு

# தலைவர் பிரபாவுடன் நேற்று பாலா கலந்தாலோசனை!

## சமாதான முயற்சிகளின் உத்தி குறித்து ஆராய்வு

கிளிநொச்சி,மே8

லண்டனிலிருந்து புறப்பட்டு நேற்றுக்காலை கிளிநொச்சிக்கு வந்துசேர்ந்த விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், வந்திறங்கிய கையோடே - நேற்றுப் பிற்பகல் - வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்தார்.

உத்தேச சமாதான முயற்சிகள் குறித்தும் அவை தொடர்பாக வகுக்கப்படவேண்டிய உத்திகள் குறித்தும் தலைவர் பிரபாகரன், மதியுரைஞர் பாலசிங்கத்துடன் பூர்வாங்க ஆலோசனைகளை நேற்றே ஆரம்பித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைகளில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் கலந்துகொண்டார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு (லண்டன் நேரப்படி) லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து தமது மனைவி அடேல் பாலசிங்கத்துடன் புறப்பட்ட அன்ரன் பாலசிங்கம் நேற்றுக் காலை 5.55 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அங்கு வழமையான பணிகளை முடித்துக்கொண்டு விமானப்படையின் விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சி

(12ஆம் பக்கம் பார்க்க)



தலைவர் பிரபாகரனும் அன்ரன் பாலசிங்கமும் நேற்று சந்தித்துப் பேசியபோது....

## அரபுக்கடலில் தாழமுக்கம்

யாழ்ப்பாணம்,மே8

குடாநாட்டில் அடிக்கடி பெய்து வரும் பலத்த மழையால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு வருகிறது.

காற்றுடன் கூடிய இந்தக் கோடை மழை அடுத்த சில தினங்களுக்குத் தொடரக்கூடும் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்தது.

அரபுக்கடலில் உருவாகிய தாழமுக்கம் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் இந்த மழைவீழ்ச்சி காணப்படுகிறது என்றும் தற்போது அந்தத் தாழமுக்கம் வலுக்குறைந்து வருவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்திருக்கிறது. (ஐ-3)

## பாலசிங்கம் பங்குபற்றுகின்ற செய்தியாளர் மாநாடு விரைவில்!

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தமது அமைப்பின் நிலைப்பாட்டை கிளிநொச்சியில் விரைவில் நடக்கவிருக்கும் செய்தியாளர் மாநாட்டில் விளக்குவார் எனத் தெரிகிறது.

இத்தகவலை அவரே வெளியிட்டிருக்கின்றார்.

கிளிநொச்சியில் நேற்று வந்திறங்கிய கையோடு 'உதயன்' செய்தியாளருக்குத் தகவல் தருகையில் அவர் கூறியதாவது:-

சமாதான முயற்சிகளில் அடுத்த கட்ட நகர்வு குறித்து தலைவர் பிரபாகரனுடன் கலந்து பேசுவதற்காகவே வன்னி வந்துள்ளேன்.

சமாதான முயற்சிகளின் அடுத்த கட்ட நகர்வுகள், யுக்திகள் தொடர்பாகத் தலைவருடன் கலந்துரையாடவிருக்கின்றேன்.

அத்துடன், இங்கு தங்கி நிற்கும் போது வெளிநாட்டு ராஜதந்திரிகளையும் சந்திக்கவிருக்கின்றேன்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸன் எதிர்வரும் 11ஆம் திகதி வன்னி வருகின்றார். தலைவருடன் சேர்ந்து அவரைச்சந்திப்பேன். சமாதான முயற்சிகள் குறித்து அவருடன் விரிவாக ஆராயவிருக்கின்றோம் - என்றார் அவர்.

இங்கு தங்கியிருக்கும்போது செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தி சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான வீடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விளக்கவிருக்கிறோம் - என்றும் அவர் கூறினார். (ஐ-3)

## சடலங்களை புலிகள் கையேற்றனர்

கொழும்பு,மே8

மட்டக்களப்பு, தன்னாமுனையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறை உறுப்பினர்கள் இருவரின் சடலங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நேற்றுக் கையேற்கப்பட்டன.

இக்கொலைகள் தொடர்பாக பதில் நீதிவான் விநோபா இந்திரன் மரண விசாரணைகளை நடத்தினார்.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலங்களை பிரேத பரிசோதனையின் பின் உரியவர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பகலவன் என்று அழைக்கப்படும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு: இறுக்கமான போக்கை அரசு தளர்த்தும்?

கொழும்பு,மே8

வடக்கு - கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களை மீளாய்வு செய்து அந்தப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்த அடுத்த ஆறுமாத காலத்துக்குள் விசேட திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப்படுத்தும் என்று தெரியவருகிறது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அகதிகள் மீள்குடியமர்வு, புனர்வாழவு, நல்லிணக்க அமைச்சுச் செயலாளர் எஸ்.ஜெயசிங்க இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகளை அடுத்த ஆறு மாத காலத்துக்குள் முன்னெடுப்பது என்ற இலக்குடன் ஜனாதிபதியின் கீழ் அமைச்சு ஒன்று உருவாக்கப்படடுள்ளது.

முன்பு இயங்கிய வடக்கு புனர்வாழ்வு அமைச்சு, கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு, வன்னி புனர்வாழ்வு அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுக்களையும் ஒன்றிணைத்து அகதிகள் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு என்ற பெயரில் புதிய அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பில் இருக்கும். அதன் செயலாளராக எஸ். ஜெயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அகதிகளை மீள்குடியமர்த்துவது தொடர்பாக அவர் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்திவருகிறார்.

அகதிகளை மீள்குடியமர்த்த வசதியாகப் பாதுகாப்பு வலயங்களை மீளாய்வு செய்வது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அவர் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரைக் கேட்டுள்ளார்.

மள்குடியமர்வுத் திட்டத்துக்கு முன்னோடியாக -

அகதிகள் தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமது சொந்த இடங்களுக்கு அவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.நகரில் கிரனேட் வீச்சு படை அதிகாரி காயம்!

மட்டக்களப்பு,மே8

மட்டக்களப்பு பஸ் நிலையச் சந்தியிலுள்ள விசேட அதிரடிப் படையினரின் காவல் நிலையத்தில் நேற்றிரவு இடம்பெற்ற கைக்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் படைஅதிகாரி ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்த விசேட அதிரடிப் படை அதிகாரியான இன்ஸ்பெக்டர் தம்மிக்ககுமார மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்றிரவு சேர்க்கப்பட்டார்.

நேற்றிரவு சுமார் 7.30 மணியளவில் காவல்நிலையத்தை நோக்கிப் பின்பக்கமாக இருந்து அடையாளம் தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டதாகவும் -

அந்தநேரம் குளித்துக் கொண்டிருந்த அதிகாரியே காயமடைந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து அதிரடிப்படை காவல் நிலையத்தில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பொலீஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் ஆகிய முத்தரப்பினரும் பாதுகாப்பு வழங்குகின்ற இடத்தில் இச்சம்பவம் எப்படி நடைபெற்றது எனப் பொலீஸார் விசாரணைகளை நடத்துகின்றனர்.(ஐ-7)

## வேலையற்ற பட்டதாரிகளிடமிருந்து 2 வருடப் பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மே.8

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் ஆள்களைத் திரட்டுவதற்காக விண்ணப்பங்களை நிதி அமைச்சு கோரியுள்ளது.

அரச துறைகளில் பொருத்தமான பதவிகளுக்கு நியமிப்பதற்காக தகுதி வாய்ந்த வேலையற்ற பட்டதாரிகளிடம் இருந்தே விண்ணப்பம் கோரப்படுகின்றது. தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு இரண்டு வருடகாலம் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு 6 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

விண்ணப்பதாரி அடுத்த மாதம் 30ஆம் திகதியன்று 35 வயதுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நேற்றுக்காலை கிளிநொச்சியில் வந்திறங்கிய அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் தமிழ்ச்செல்வனுடன் காரில் புறப்பட்ட காட்சி.
(படங்கள்: வசந்தன்)

# சிசு கைவிடப்பட்ட சம்பவம்: நேற்றும் நீதிமன்றில் விசாரணை

யாழ்ப்பாணம்,மே8

பிரசவித்த சிசுவை யாழ்.போதனா வைத்தியசாலை கழிவறைக்குள் கைவிட்டு மாணவி ஒருத்தி தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்.நீதிமன்றத்தில் நேற்றும் இடம்பெற்றன.

யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இடம்பெற்ற இவ் விசாரணையில் வைத்தியசாலைக் கழிவறையைச் சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்ட பெண் தொழிலாளி, மாணவியின் தாயார் ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

பிரஸ்தாப மாணவி கருத்தரிக்கக் காரணமாக இருந்தார் என்று கூறப்படும் இளைஞன் தொடர்பான விவரங்களைத் தாயார் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து பிரஸ்தாப இளைஞனைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ-3)

# தலவாக்கலையில் நாளை ஆர்ப்பாட்டம்!

மின் உற்பத்திக்கான மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகளை எதிர்த்து நாளை தலவாக்கலையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த பொது அமைப்புக்கள் முடிவுசெய்துள்ளன.

நாளை காலை 10 மணிக்கு தலவாக்கலை நகரில் இடம்பெறும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பொது அமைப்புக்களையும் இணைந்து கொள்ளுமாறு தேசிய வளங்களையும் மனிதவுரிமைகளையும் பாதுகாப்பதற்கான ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த அரசின் காலத்தில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அப்போதிருந்தே அத்திட்டத்தை இ.தொ. காங்கிரஸ் உட்பட பல பொது அமைப்புக்கள் கடுமையாக எதிர்த்து வந்தன. அந்தத் திட்டத்தைச் செயற்படுத்தினால் அப்பிரதேச மக்களுக்கு அதனால் பேரிழப்பு என அவை சுட்டிக்காட்டின. எனினும் மேல்கொத் மலைத்திட்டத்தை கைவிடமுடியாது, அதை அமுல்படுத்தியே தீருவது என்ற வகையில் அந்த அரசின் அமைச்சரவையிலும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

புதிய அரசு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மேல்கொத்மலைத் திட்டத்தை ஆரம்பிக்க முடிவுசெய்துள்ளது. இதை ஆட்சேபித்தே இந்த அமைப்புக்கள் நாளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முடிவுசெய்துள்ளன.

(ஐ-க)

# மாகாணசபைத் தேர்தல் ஜூலை 17 இல்!

கொழும்பு,மே8

பதவிக்காலம் முடிவடைந்துள்ள ஆறு மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை 17 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஊவா, மத்திய, சப்ரகமுவ, மேல் வடமத்திய மற்றும் தென்மாகாண சபைகளுக்கே இந்தத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

ஊவா, மத்திய மாகாணங்களுக்கான வேட்பு மனுத்தாக்கல் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை இடம்பெறும் என்றும்-

எஞ்சிய மாகாணங்களுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் காலம் அடுத்துவரும் வாரங்களில் அறிவிக்கப்படும் என்றும் - தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் 95 லட்சத்து 21 ஆயிரத்து 331 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மத்திய மாகாணசபைக்கு 56 உறுப்பினர்களும் ஊவா மாகாண சபைக்கு 33 உறுப்பினர்களும் சப்ரகமுவ மாகாணசபைக்கு 44 உறுப்பினர்களும் மேல் மாகாணசபைக்கு 104 உறுப்பினர்களும் வடமத்திய மாகாணசபைக்கு 33 உறுப்பினர்களும் தென்மாகாணசபைக்கு 53 உறுப்பினர்களும் இத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

(ஐ-க)

# மரக்கட்டை வீழ்ந்ததால் பாபாவின் கை எலும்புமுறிவு!

பெங்களூர்,மே8

ஸ்ரீ சத்தியசாயிபாபா மீது மரக்கட்டை வீழ்ந்தது. இதனால் அவரது கை எலும்பில் முறிவு ஏற்பட்டது.



பெங்களூரை அடுத்த காடுகோடிப் பகுதியில் சாயிபாபாவின் பிருந்தாவன் ஆச்சிரமம் உள்ளது. கோடைக் காலத்தில் சாயிபாபா இங்கு தங்கியிருப்பார். கடந்த மாதம் பெங்களூர் வந்த அவர், பிருந்தாவன் ஆச்சிரமத்தில் தங்கியிருந்தார். கடந்த புதன்கிழமை காலை ஆச்சிரமத்தில் நடந்து வந்தபோது திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருந்த மரக்கட்டை தவறி பாபாவின் கை மீது வீழ்ந்தது. இதில் பாபாவின் கைஎலும்பு முறிந்தது.

கையிலுள்ள எலும்பு பிசகியிருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர். அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது சாயிபாபா நலமுடன் இருக்கிறார் என டாக்டர்கள் தெரிவித்தனர். (ஐ-க)

# ஒலுவில் துறை ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

அக்கரைப்பற்று,மே8

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஒலுவில் துறைக் கடல் சார் பயிற்சி நிலையம், திட்டமிடல் பிரிவு, மகாபொல பயிற்சி நிலையம் என்பவற்றில் பணிபுரியும் நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களை ஆட்சேபித்து நேற்று நண்பகல் 12.30 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து தற்காலிகமாக இடமாற்றம் பெற்று வந்த ஊழியர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எழுதுவினைஞர், பாதுகாப்பு ஊழியர், காரியாலய உதவியாளர், தொழிலாளர், சுத்திகரிப்புத் தொழிலாளர் ஆகிய தரங்களில் உள்ள இந்த ஊழியர்களுக்கே இப்போது இடமாற்ற உத்தரவு கிடைக்கப்பெற்றுள்ளது.

டிசெம்பர் 15 ஆம் திகதிக்குப் பின்னர் - பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்து சுமார் 250 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஒலுவிலுக்கு இடமாற்றம் பெற்றிருந்தனர்.

ஒலுவிலில் ஊழியர்கள் மேலதிகமாக உள்ளனர் என்ற காரணத்தினால் மீண்டும் வேறு இடங்களுக்கு இவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் மீண்டும் தங்கள் சொந்த வேலைத்தளங்களுக்குச் செல்லுமாறு இவர்களுக்கு தற்போது பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தமது இடமாற்றம் அநீதியானதென்றும் நான்கு மாதங்கள் கூட ஆகாத நிலையில், மீண்டும் இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது தவறு என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

(ஐ-க)

## விளையாட்டு நிகழ்வுகள்

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

★ அரியாலை மத்திய வி.க.எதிர் கே.சி.சி. விளையாட்டுக் கழகம்.

★ கிராஸ்கொப்பர்ஸ் வி.க. எதிர் பற்றீசியன் வி.க.

முன்னர் இடம்பெற வேண்டிய இந்த ஆட்டங்கள் மழையினால் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

★ ★ ★

மாவட்ட மட்டத்திலான மேசைப் பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் யாழ். வை.எம்.சி.ஏ. உள்ளக அரங்கில் காலை 9மணிமுதல் இடம்பெறவுள்ளன.

இப்போட்டியில் பங்கேற்பதற்காக 8 மாவட்டங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் இங்கு வந்துள்ளனர்.(ஒ)

# ஊடகவியலாளர் புதிய வளங்களை பயன்படுத்த வாய்ப்புக்கள் கிடைக்கும்

## யாழ். ஊடக வள இணைப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மே8

குடாநாட்டு ஊடகவியலாளர்கள் புதிய வளங்களைப் பயன்படுத்த விரைவில் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ். இது விடயமாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

டென்மார்க் அரச உதவியுடன் யுனெஸ்கோ, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் அமைப்பதென முடிவுசெய்யப்பட்டது. முன்னாள் துணைவேந்தர் பேராசி ரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சி கொடுப்பதும், அவர்கள் ஊடகவியல் செய்திகளையெல்லாம் உடனடியாக அறிவதற்கும் - அறிவிப்பதற்கும் ஏற்ற நவீன தகவல் தொழில்நுட்பக் கருவிகளைக் கையாளுவதற்குரிய வாய்ப்புகளை வழங்குவதும் இம்மையத்தினுடைய நோக்கமாகும்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் இம்மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கு 8 பணியவைகள் நடத்தப்பட்டுள்ளன. முதலாவது பணியவையிலே 60 ஊடகவியலாளர்கள் பங்குபற்றியுள்ளனர். நடைபெற்ற 8 பணியவைகளிலும் 260 ஊடகவியலாளர்கள் பங்குபற்றினர். இவ்வாறு பணியவைகள் நடத்துவது மட்டுமன்றி, ஊடகவியலாளருக்கு ஊடகவியலில் ஏற்ற கல்வித்தராதரம் வழங்குவதற்காக இதழியலில் டிப்ளோமாக் கற்கை நெறியினையும் தொடங்க வேண்டுமென யுனெஸ்கோ தன்னுடைய அறிவுறுத்தல்களில் குறிப்பிட்டிருந்தது. தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் இதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.

ஊடகவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான பாடத்திட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடப் பரிந்துரையுடன் பல்கலைக்கழக மூதவையின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மூதவை இக்கற்கை நெறியினைப் பகுதிநேரக் கற்கையாகவும், முழுநேரக்கற்கையாகவும் தொடங்குவதற்கும் அதற்குரிய பாடநெறிக்கும் ஒப்புதல் வழங்கியது. இக்கற்கை நெறி இம்மாத இறுதிப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதழியல் கற்கை நெறியினைக் கற்பிப்பதற்குரிய விரிவுரையாளர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. இவர்களை நியமிப்பதில் எடுத்த முதற்சுற்று முயற்சி இனனும் முடிவடையவில்லை. இதற்கான துணைவேந்தர் தலைமையிலான தெரிவுக்குழு இன்னும் சில தினங்களில் கூடவுள்ளது.

இதழியல் பயிற்சியாளர்களைப் பயிற்றுவதற்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ஒரு பணியவையினைத் தங்களுடைய செலவில் நடத்த பி.பி.ஸி. முன் வந்துள்ளது. இதற்கமைய 26.04.2004 தொடக்கம் 30.04.2004 வரை பி.பி.ஸியின் பயிற்சியாளரைப் பயிற்றுவிக்கும் கெவின் போடன் பணியவையினை நடத்தினார். அவருடன் வந்த பொ.மாணிக்கவாசகம் உட்பட நான்கு ஊடகவியலாளர்கள், உதயன், வலம்புரி, தினக்குரல் சார்பாக மூவர், இதழியல் விரிவுரையாளருக்காக நடைபெற்ற தேர்வுக்கு தோற்றியவர்கள் மூவர் (எஸ்.ரகுராம், வண.பிதா ரூபன் மரியாம்பிள்ளை, எஸ்.சத்தியவேந்தன்), யாழ்.பல்கலைக்கழகம் சார்பாக கலாநிதி கி. விசாகரூபன், கே.ரி.கணேசலிங்கம், இணைப்பாளர் ஆகியோர் இப்பணியவையில் பங்குபற்றினர்.

இன்னும் பல பணியவைகளை இம்மையம் நடத்தவுள்ளது. பல்கலைக் கழகத்துடன் இம்மையம் இணைந்து செயற்படுவதால் பல்கலைக்கழக சட்டதிட்டங்களுக்கமையவே எம்முடைய பணிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இந்த மையத்தின் வளங்களை ஊடகவியலாளர் ஏற்றமுறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இணையத்தளம், மின்னஞ்சல் வசதிகளைப் பயன்படுத்த வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன -என்று அதில் உள்ளது.

(எ)




தெற்கில் வாடகைக்கு அமர்த்தப்பட்டு எடுத்துவந்து விற்பனை செய்யப்பட்ட வாகனங்களையே படத்தில் காண்கிறீர்கள் வாகனங்களைக் கைப்பற்றிய யாழ். பொலீஸ் நிலைய சிறுகுற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஜே.பீ.ராஜபக்ஷ மற்றும் அவரது குழுவினர் படத்தில் உள்ளனர். (9)

# வாகன விற்பனை மோசடி கைதான இளைஞனுக்கு பிணை

## பிணைப்பணம் செலுத்தாததால் மறியல்

யாழ்ப்பாணம்,மே8

தெற்கில் வாடகைக்கு அமர்த்தி எடுத்துவந்த கார் ஒன்றை ஐந்து லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்து மோசடி புரிந்தார் என்று கூறப்படும் இளைஞனுக்கு யாழ்நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியது.

பிரஸ்தாப இளைஞனை ஒரு லட்சம் ரூபா காசுப் பிணை மற்றும் 5 லட்சம் ரூபா பெறுமதியான லிகிதர் தரத்துடைய ஓர் அரச ஊழியரின் ஆள் பிணையில் செல்ல யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா அனுமதித்தார்.

ஆனால், பிரஸ்தாப இளைஞன் குறிப்பிட்ட பிணையைச் செலுத்தத் தவறியதால் அவரை மறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இவருக்கு எதிராக கல்கிசை நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து கல்கிசை நீதிமன்றத்தில் வழக்கில் தோற்றி, நீதிமன்றத்தில் பிரசன்னமாகியதை உறுதிப்படுத்தும் அறிக்கையை அடுத்த மூன்று வாரத்துக்குள் சமர்ப்பிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பிரஸ்தாப இளைஞன் வாடகைக்கு அமர்த்திய 'ஹை ஏஸ்' வான் ஒன்றையும் யாழ்ப்பாணத்தில் விற்று மோசடி புரிந்துள்ளார் என்று பொலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (முன்னர் வந்த செய்தி 7 ஆம் பக்கத்தில்)

(ஐ-3)

# யாழ். மருத்துவபீட வெள்ளிவிழாவின் இரண்டாவது அங்கமாக கலைநிகழ்வுகள்

## மாணவர்கள் மட்டுமே பங்குகொள்ளும் தனித்துவம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் வெள்ளிவிழா ஆண்டு இது. கடந்த 25 வருட காலப்பகுதியில் மருத்துவபீடம் பெற்ற வளர்ச்சியும், எழுச்சியும் அளவிடமுடியாதவை.

இவற்றையெல்லாம் எடுத்துக்கூறும் வகையில் மருத்துவ மாணவர்கள் வெள்ளிவிழா ஆண்டில் பல்வேறு நிகழ்வுகளை நடத்துகின்றார்கள். அதில் ஒன்றுதான் அண்மையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடைபெற்ற மருத்துவக் கண காட்சி. இது முழுக்க முழுக்க மருத்துவ மாணவர்களினால் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. அதன் விளைவாக மாணவர்களுக்கும், மக்களுக்கும் மிகவும் அவசியமான கருத்துக்களும், மருத்துவம் தொடர்பான அறிவும் கிடைக்கப்பெற்றது. மருத்துவக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வெளி மாவட்டங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான மாணவர்களும், மக்களும் வந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மருத்துவ பீடத்தின் அதி உச்சப் பயன்பாட்டின் பலாபலன் என்று சொல்லுமளவுக்கு இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. அதன் அடுத்த கட்டமாக இப்போது இந்தக் கலை நிகழ்வு நடைபெறுகின்றது. வாழ்க்கையின் ஒரு அத்திவாரம் கலை என்பதை வலியுறுத்தி இந்தக் கலை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றும், நாளையும் மருத்துவபீடக் கேட்போர் கூடத்தில் இது நடைபெறுகின்றது.

மருத்துவபீட மாணவர்களின் முழுமையான பங்களிப்புடன் இந்தக் கலைநிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கலைநிகழ்வு அனைத்திலும் மருத்துவ மாணவர் முழுமையாகப் பங்கேற்பது தனித்துவமாகும். குடாநாட்டில் உள்ள பிரபல்யமான கலைஞர்கள் சிலர் இந்த நிகழ்வுகளில் மாணவர்களுக்கு பக்கபலமாக தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். நடனம், கர்நாடக இசைக்கச்சேரி, பட்டிமன்றம், நாட்டிய நாடகம், இசைநிகழ்ச்சி என்பன இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் மருத்துவ பீடாதிபதியுமான க.பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் கலந்துகொள்வார்கள்.

இரண்டாம் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். கவியரங்கம், குழுநடனம், நாடகம் என்பன இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரியவும், சிறப்புவிருந்தினராக 'உதயன்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனும் கலந்து கொள்வர்.

இந்தக் கலைநிகழ்வுகளில் விசேட அம்சமாக சிங்களக் கலைநிகழ்வுகளும் நடைபெறுகின்றன. யாழ்.மருத்துவ பீடத்தில் 20 சிங்கள மருத்துவ மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்களின் கலை நிகழ்வுகளான நடனம், கிராமிய நடனம் என்பனவும் நடைபெறவுள்ளன. மொத்தத்தில் ஒரு முழுமையான நிறைவான கலைவிழாவாக இதனை ஏற்பாடு செய்துள்ளார்கள் மருத்துவபீட மாணவர்கள்.

தொகுப்பு: தேவா




# மருத்துவபீட கலைநிகழ்வுகள் குறித்து இவர்கள்...

## மனித வாழ்வு முழுமைபெறுவதற்கு விஞ்ஞானம், கலை இரண்டும் அவசியம்



கலை மனிதனை ஒழுக்கமுடையவனாக ஒழுங்குபடுத்துகின்றது. மனிதன் தனது வாழ்வில் முழுமைபெற விஞ்ஞானம், கலை ஆகிய இரண்டும் அவசியமானவை.

இவ்வாறு தெரிவித்தார் வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவஞானசுந்தரம்(நந்தி). யாழ்பல்கலைக்கழக மருத்துவ பீட வெள்ளி விழாவையொட்டி நடைபெறும் கலைநிகழ்வு பற்றிக்கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது மருத்துவபீட மாணவர்கள் முழுமையானவர்களாகவும் திறமையானவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்கள் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் அல்லர். மனிதர்களுடன் மனிதர்களாக பழகுபவர்கள். ஒரு மனிதனை பண்புள்ளவனாக பக்குவப்படுத்த கலை அவசியமானது. அதற்காகத்தான் இந்தக் கலை நிகழ்வு மருத்துவபீட மாணவர்களினால் நடத்தப்படு கின்றது.

ஒரு மருத்துவனுக்குப் புரிந்துணர்வு முக்கியமானது. அந்தப் புரிந்துணர்வு கலையின் மூலம் கிடைக்கின்றது. அந்தக் கலையைப் பயன்படுத்தி மருத்துவன் மக்களுடன் பழகுகின்றான்.

இந்தக் கலை நிகழ்வானது மருத்துவபீட மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் ஒரு அங்கமாகவே உள்ளது. அவர்களுடைய கல்விக்குக் கலையும் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது - என்றார்.

## மருத்துவ மாணவரும் சிறந்த கலைஞரே; இதனை உணர்த்தவே கலை நிகழ்வுகள்



மருத்துவ பீடாதிபதி கலாநிதி கே.சிவபாலன் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

மருத்துவபீட மாணவர்கள் மருத்துவ வாரத்தில் பலவேறு வகையான கலைநிகழ்வுகளை நடத்திவருகின்றார்கள். மருத்துவபீடத்தில் ஏராளமான கலை ஆர்வம் மிகுந்த மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரினதும் வெளிப்பாடுதான் இந்தக் கலை நிகழ்வு. அவர்களே இநதக் கலைநிகழ்வை ஏற்பாடுசெய்து திறம்பட நடத்துகின்றார்கள்.

இந்தக் கலை நிகழ்வை நாம் நடத்துவதன்மூலம் எமது 25 வருட பாரம்பரியத்தை நினைவு கூருகின்றோம். கடந்த 25 வருடங்களில் எமது மருத்துவபீட வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிய அநேகர் உள்ளார்கள். அவர்களுக்கான ஒரு கௌரவமாகவே நாம் இந்தக்கலை நிகழ்வை நடத்துகின்றோம். ஏனெனில், மருத்துவபீடத்தின் இருப்புக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் அவர்கள்தான்.

மாணவர்கள் பாடசாலையில் கல்வி பயிலும் சிறந்த கலைஞர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் பல்கலைககழகத்துக்குள் வந்தவுடன் கலை ஆர்வத்தை இழந்துவிடககூடாது. ஏனெனில் கலை வாழ்க்கையின் ஓர் அத்தியாயம். கடந்த காலங்களில் பல கலை நிகழ்வுகளை யாழ். மருத்துவபீடம் நடத்தியிருக்கின்றது. - என்றார்.

## மருத்துவ பீடத்தின் கலை வரலாற்றை தொடர்ந்து பேணுவதற்கான முயற்சி



கலைநிகழ்வு ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் ரி.ஜீவராஜ் தெரிவிக்கையில்:-

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கலைத்துறைக்கு ஒரு நீண்ட வரலாறு உள்ளது. அந்த வரலாற்றை நாம் தொடர்ந்து பாதுகாத்து வருகின்றோம். அந்தவகையிலதான் எமது இந்த கலை நிகழ்வுகள் அமையவுள்ளன. மிகவும் கஷ்டப்பட்டு சில வித்தியாசமான கலை நிகழ்வுகளை நாம் நடத்துகின்றோம். அனைத்துக் கலைநிகழ்வுகளிலும் எமது மருத்துவ மாணவர்கள்தான் பிரதான பாத்திரங்களை வகிக்கின்றார்கள்.

இந்தக் கலை நிகழ்வுக்கு உதவி புரிவதற்காக யாழ். குடாநாட்டில் உள்ள பிரபல்யமான கலைஞர்களின் உதவியையும் நாம் பெற்றிருக்கின்றோம். இதன் மூலம் ஒரு தரம் வாய்ந்த கலைநிகழ்வுகளை நாம் நடத்தவிருக்கின்றோம்.

எமது மருத்துவ மாணவக் கலைஞர்கள் பலர் தமது ஆற்றல்களையும் திறமைகளையும் இதில் வெளிப்படுத்துவார்கள்.

அத்துடன், எமது கல்விச் செயற்பாட்டுக்கும் ஆளுமை விருததுக்கும் இந்தக் கலை நிகழ்வுகள் அவசியமானவை. கலை என்பது அனைவருக்கும் உரித்தானது.

எனவே, எமது மருத்துவபீட மாணவர்களும் தமது கலைத் திறமைகளை வெளிப்படுத்த இது சிறந்த சந்தர்ப்பம் - என்றார்கள்.

# யாழ்ப்பாணத்தின் கலவைத் தொழில்நுட்பம்: மிகவும் சிறப்பான உயிர்நுட்பு ஆராய்ச்சி!

## உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியை பாராட்டு

யாழ்ப்பாணம்,மே8

யாழ்ப்பாணத்தின் உயிர் நுட்புக் கலப்புமுறை (Bio Tech Blending) தனிச்சிறப்புடையதாக விளங்குகின்றது. இதன் சிறப்பை நான விஜயம் செய்த பல தென் அமெரிக்க நாடுகளிலும், தென்னாபிரிக்க நாடுகளிலும் அறிமுகம் செய்து அதனைக் கைக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

- இவ்வாறு தெரிவித்தார் சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்தைச சேர்ந்த பேராசிரியை மாலின் ஒக்கர்புளெம்.

கடந்த மாத இறுதியில் உயிர் நுட்பு நிறுவனத்தின் புதிய வளாகம (திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்குச் சமீபமாகத்) திறந்து வைக்கப்பட்டது.

உயிர்நுட்பு நிறுவனத்தின் (Bio Tec Interaqtioual Ltd.) பிரதான மண்டபத்தில் நடைபெற்ற திறப்பு விழாவில் சிறப்புரை ஆற்றியபோதே பேராசிரியை மேற்கண்டவாறு சொன்னார்.

உயிர்நுட்பு நிவனத்தின் புதிய வளாகத்தை உப்சலாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ருனே லிமின்கா பெயர்க் கல்லைத் திரை நீக்கம் செய்து திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் தலைவரும் முன்னாள் மருத்துவ பீடாதிபதியுமான பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் திறப்புவிழா நிகழ்வுகள் நடைபெற்றன.

அங்கு சிறப்புரை ஆற்றிய பேராசிரியை மாலின் ஒக்கர்புளெம் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர் நுட்புத் தொழில்நுட்பத்தில கலவை (Blending) செய்தல என்பது ஒரு குறிப்பிடக்கூடிய பகுதியாகும். யாழ்ப்பாணத்தில் இப்பிரதேச பாரம்பரிய கலவை, பதம்படுத்தல் முறைகளையும் நவீன உயிர் நுட்பு மூலமான கலவை, பதம்படுத்தல் முறைகளையும் சேர்த்து புதிய கலவை முறைகளை விஞ்ஞான ரீதியாக நிறுவியுள்ளார்கள் இதனால், இங்குள்ள பல மூலப்பொருள்களை தக்கபடி பயன்படுத்தி முன்னேற்றம் காணலாம்.

### பனைப் பயன்பாடுகளையும் பெருக்கலாம்

குடாநாட்டின் பிரதான மரமான பனையின் பழச்சாறில் உள்ள கசப்புத் தன்மையை நீக்கும் பதார்த்தம் ஒன்றையும் இங்கு உருவாக்கி உள்ளார்கள். இதன் விளைவாக பனையின் பயன்பாடுகளைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பு பெரிய அளவில் உண்டாகும்.

எமது நாடு வழங்கிய ஆராய்ச்சி அபிவிருத்தி நிதி எம்மைப் பொறுத்த வரையில் மிகவும் குறைந்தது. ஆனால, இங்கு அதனை வைத்து பெரிய அளவில் ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன; பெறுபேறுகள் கிடைத்திருக் கின்றன. உண்மையில யாழ்ப்பாணத் தவர்களின் மூளைத் திறன் பாராட்டப்பட வேண்டியதாகும் என்றார்.

திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் பேராசிரியர் ருனே லிமின்கா கூறியதாவது:-

உயிர்நுட்பு ஆராய்ச்சி நிலையத்தை கொழும்பு பல்கலைக் கழகத்தில் நிறுவுவதற்கே முதலில் உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால், பேராசிரியர் பாலசுப்பிரமணியம் யாழ்ப்பாணத்தில் நிறுவவேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தார். பல இடர்பாடுகள், கஷ்டங்கள் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் யாழ் உயிர்நுட்பு தொழில்நுட்பம் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி கண்டுள்ளது. கடின உழைப்பே இதற்கு முக்கிய காரணம் என்பது எனது கருத்து. இந்த நிலையத்தின் வளர்ச்சிக்கு எமது பல்கலைக்கழகமும், நாடும் மேன் மேலும் உதவிகளை வழங்கும் - என்றார்.

திருமதி இன்கா பிறித் லிமின்கா பேசுகையில்-

தாம் முதன்முதலாக யாழ்ப்பாணம் வந்திருப்பதாகவும் இங்கு அளிக்கப்பட்ட வரவேற்பை ஒருபோதும மறக்க முடியாது. வாழ்நாள் முழுவதிலும் நினைவிலிருக்கும் என்றும் நன்றிப் பெருக்குடன் தெரிவித்தார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் எஸ். ஜெபநேசன் ஆகிய மூவரும ஆசியுரை வழங்கி உரையாற்றினர். யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி கே. சிவபாலனும் நிகழ்வில் பேசினார்.

(அ)

## அறிவித்தல்

புளியங்கூடலில் அமைந்துள்ள "பழைய குடியிருப்பு" என்ற காணியையும் வீட்டையும் அதன் உரிமையாளர் நாகலிங்கம் இரத்தினமோ அல்லது அவரின் தத்துவக்காரர் செல்லையா சிற்றம்பலமோ தவிர வேறுயாரும் உரிமை கோரவோ அல்லது விற்கவோ, நன்கொடை வழங்கவோ, சீதனமாக வழங்கவோ இயலாது என்பதனை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

தத்துவகாரர்
செ.சிற்றம்பலம்.

(31713)(37-21-13-12)

## மணல் விநியோகத் திகதி மாற்றம்

இன்று (08.05.2004) சனிக்கிழமை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. இன்றைய திகதியிடப்பட்ட மணல் அனுமதிப்பத்திரங்களுக்கு எதிர்வரும் 15.05.2004 சனிக் கிழமை மணல்விநியோகம் நடைபெறுமென்பதை அறியத் தருகின்றோம்.

*மணல் விநியோகப் பகுதி,*
*உபயகதிர்காமம்,*
*புலோலி, பருத்தித்துறை.*

- நிர்வாகம்.

(C/34742)(34-21-12-13)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03 - 06 - 1927

மறைவு
20 - 04 - 2003

### திருமதி கார்த்திகேசு செல்லம்மா


ஓராண்டு சென்றாலும் ஆறுதில்லை எம் மனம்
தீராத வேதனையால் தினம் தினம் துடிக்கின்றோம்
எப்போதும் உங்கள் முகம் நெஞ்சில் தெரிகிறதே!
இப்போது சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.*

தட்டாங்குள வீதி,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(31541)(34-21-12-13)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



*அவனியில்*
15 – 08 – 1945

*அவனிடம்*
19 – 04 – 2003

### அமரர் செல்லையா இராஜேந்திரம்

திதி: 08.05.2004 (சனிக்கிழமை)

நான்கு சட்டங்களுக்குள் நடுநாயகமாக
புன்னகை உதிராத நட்சத்திரமாக உன்முகம்
ஆண்டொன்று ஆனாலும் உன் பிரிவு ஆறாத ரணமாக
சுமைகளைச் சுகமென்று சுமந்தாய் - அன்று எமக்காக
நின் இழப்பின் சுமைகளைச் சுமக்கும் நெஞ்சங்கள் - இன்று உனக்காக
தலைவனைப் பிரிந்த துணையும் தந்தையை இழந்த இரு குஞ்சுகளும்
தம்பியைப் பறிகொடுத்த உடன் பிறப்புகளும் சுற்றமும்
உன் நினைவுகளின் மீட்டலில் கூடியிருக்கிறார்கள் வட்டமாக
குவியாத ரோஜாவாய் எம் இதயத்தில் என்றும் மணமாகப்
பூத்திருப்பாய் எம் ஜீவனில் புன்னகையாக.

என்றும் உங்கள்
நினைவோடு வாழும்:
**உறவினர்.**

ஞானவைரவர் கோவில் ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(C/34702)(34-21-12-13)

## அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம்,மே8

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனைக் கான புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும்விழா, கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ. அரச அதிபர் செ.பத்மநாதன் அடிக் கல்லை நட்டுவைத்தார்.

இப்புதிய கட்டடம் யாழ். ரெலிகொம் நிறுவனத்தின் செயற்பாட்டுப் பணிமனைக்கு அருகில் அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-185)

## மாதாந்த இசைநிகழ்வு

யாழ்ப்பாணம்,மே8

நல்லூர் இளங்கலைஞர் மன்றத் தின் மாதாந்த இசை நிகழ்வு மன்றக் கலா மண்டபத்தில் நாளை ஞாயிற் றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடை பெறவுள்ளது.

நிகழ்வில் கிழக்குப் பல்கலைக் கழக சிரேஷ்ட இசை விரிவுரையாளர் சங்கீத வித்துவான் ஏ.கே. கருணா கரனின் கர்நாடக இசைக்கச்சேரி இடம்பெறும். (ஒ-10-88)

## காணாமற்போனவரின் தந்தைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே8

கடந்த 96ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனவர் என்று கூறப்படும் மறவன்புலோவைச் சேர்ந்த முருகன் சிவராசா தொடர் பாக அவரது தந்தையாரிடம் விளக்கம் பெற்றுக்கொள்ளுமாறு பொலீஸாரைச சட்டமா அதிபர் பணித்துள்ளார்.

இதற்கமைய அவரது தந்தையான சின்னத்தம்பி முருகனின் தற்போதைய வதிவிடமுகவரியை எல்.என்.ஜி.ஜய ரத்தின, பொலீஸ் பரீட்சகர், காணா மற் போனோர் தொடர்பான விசார ணைப் பிரிவு, இல.101, சைத்தியவீதி, கொழும்பு - 01 என்ற முகவரிக்கு அறி யத தருமாறு பொலீஸார் கேட்டுள் ளனர். (ஒ-10)

## மணல் கடத்தியவருக்கு ஒரு மாதச் சிறை!

வலி.வடக்கு,மே8

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்தவருக்கு ஒருமாதம் சிறைத் தண்டனையும் 20ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் அச்சுவேலிப் பொலீஸாரால் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜா செய்யப்பட்ட சண்டிலிப்பாய் மாகியப் பிட்டியைச் சேர்ந்த நபருக்கே இத் தண்டனை விதிக்கப்பட்டது.

மணலை பறிமுதல் செய்த நீதி வான், சங்கானை அரசினர் வைத் தியசாலைக்கு அதனை வழங்கும் படியும் உத்தரவிட்டார்.

(ஒ-86)


ORGAN NOTES

Organ, Guitar, Melodica, வயலின். வீணை. புல்லாங்குழல் போனற இசைக் கருவிகளுக்கான சினிமாப் பாடல்கள். பக்திப்பாடல்கள் போனறவற்றின் "இசைக் குறிப்புகள்" (Notes) பாகம் 27வரை வெளிவந்துள்ளன.

தொடர்பு: **S.S.Rajeendran**
Karaweena Isai Manram,
75, Temple Rd, Nallur, Jaffna.
T.P.:0777-031293. (31390)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் கிழக்கைச் சேர்ந்த

### திரு.தம்பையா கந்தசுவாமி

(உரிமையாளர், பெஷன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)

*அவர்கள் 21. 04. 2004 அன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ். நந்தசேகரன் முன் னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட மையையிட்டு நாம் பெரிதும் உவகையடைகின்றோம்.*

*இவர் மேன்மேலும் சிறப்புற காரைக்கால் சிவன் துணை புரிவாராக.*

**சண்முகநாதன் குடும்பம்,**
**பாலகுமார் குடும்பம்.**

திருப்பரம்குன்றம்,
**இணுவில்.**

(31724)(21-13-12)

உ

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை



தவப்பேறு
21 - 12 - 1918

சிவப்பேறு
08 - 05 - 2003

கோப்பாய் - இணுவில்

### அமரர் கந்தையா ஆறுமுகம்

(ஆசிரியர்)

திதி: 26-04-2004

எந்தையே!
எம்மை ஆளாக்கிய தெய்வமே!
இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவாத அன்பே!
வணங்குகிறோம் ~ எம்மை
வண்ணமுறக் காத்திடுவீர்!

திருமதி சரஸ்வதி ஆறுமுகம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

*28, கைலாயபிள்ளையார் வீதி,*
*நல்லூர்.*

(31722)(42-21-12-13)

## மரண அறிவித்தல்

### திருமதி முருகேசு பரமேஸ்வரி

(பிள்ளை அக்கா)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவி பரமேஸ்வரி 28.04.2004 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

இவர் ஸ்ரீகுமரன் (அச்சுவேலி ப.நோ.கூ.சங்க லிகிதர்), சிவகுமாரன் (ஆசிரியர் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் நிர்வேலி), கௌரி (கொழும்பு), மனோகரி (ஜேர்மனி), வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கோகிலநாயகி, சந்திரகுமாரி, சிவகுமார் (பொறி யியலாளர்), சிவானந்தம் (ஜேர்மனி), குலேந்திரன் (பிரான்ஸ்) ஆகி யோரின் அன்பு மாமியாரும் சபிதா, ராகுலன், பார்த்தீபன், பிரகாஷ், பிரசான், சகிலா, மதுரா, மயூரி, ஷகானா, சாதனா, சர்மிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.சிவகுமாரன் (மகன்)
(ஆசிரியர் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்).

(31732)
(37-12-21)


யாழ்ப்பாணத்தில்! புதியதோர் முயற்சி!!

நேரடி ஒலிபரப்பாளர் பயிற்சிநெறி!
ஊடகவியலாளர் பயிற்சிநெறி!

என்றும் புதுமையை வழங்கும் ஜோ - எகட்டன் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் பயிற்சிநெறி!

★ கொழும்பில் இருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்
★ மிகப்பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள் பயிற்சிகளை வழங்குவார்கள்

ஆரம்பம் ஜூன் முதல் வாரம்

பயிற்சிக்கான முழுக் கட்டணம்
5000/- மட்டும்

பதிவுக்கட்டணம் ரூபா 1000/

பயிற்சிக்காலம் 6 மாதங்கள்

※ தமிழ் மொழியில் திறமைச்சித்தி, ஆங்கிலம் சாதாரண சித்தியுடன் க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

※ எதிர்வரும் மே-31இற்கு முன் விண்ணப்பம் அனுப்பவேண்டும்.

பதிவுக்கட்டணம் ரூபா 1000/-இற்கான காசுக் கட்டளையை "**Zenith Marketing and Advertising Systems**" என்ற பெயரில் சுண்டுக்குளி தபாலகத்தில் மாற்றக்கூடியதாக விண்ணப்பத்துடன் அனுப்பவும்.

அனுப்பவேண்டிய முகவரி: **செனித் மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்ரம்ஸ், மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

மேலதிக விவரங்களுக்கு தொ.பே.இல. 222 - 7227

(C/34895)(40-12-13-21)

உதயன்

# அமைதி முயற்சிகளில் சாண் ஏற முழம் சறுக்கல்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சி 'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலையில்தான் உள்ளது.

சமாதானப் பேச்சு மூலம் அமைதித்தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டுமானால் முதலில் பேச்சுமேசையில் அமர வேண்டிய இரு தரப்பினரிடையேயும் உள்ள கசப்புணர்வு மறைந்து நல்லெண்ண உணர்வு மலர வேண்டும். சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணியாற்றும நோர்வேத் தரப்பும் இதையே சுட்டிக் காட்டியுள்ளது.

பேச்சுமேசையில் அமர வேண்டிய ஒரு தரப்பு - இலங்கையில் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள புதிய அரசு; மறுதரப்பு - தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள்

புதிய அரசிற்குத் தலைமை வகிக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவிவந்த - நிலவி வருகின்ற - கசப்புணர்வை நீக்குவதற்கு பல தரப்பட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அந்தவிடயங்களும் கூட சாண் ஏற முழம் சறுக்ுபவையாகவே உள்ளன என விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இருதரப்புகளுக்கும் இடையே சுமுக நிலையை ஏற்படவிடாமல் முட்டுக்கட்டையாக இருக்கும் அம்சங்களில் முக்கியமானது கருணா விவகாரம்.

அண்மையில் அனுசரணைப் பணிக்காக இலங்கை வந்து திரும்பிய நோர்வே மூலம், கருணாவுக்கும் தங்களுக்கும் தொடர்பேதுமில்லை என்று அரசுத் தரப்பு புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தியது என அறியமுடிந்தது.

எனினும் புலிகளுக்கென்று - வியந்து பாராட்டக் கூடிய திறமைமிக்கதான - தனியானதொரு புலனாய்வுப பிரிவு உள்ளது. தற்போது நடந்துவரும் சம்பவங்களின் பின்னணியில் ஊடுருவி, விடயங்களை புலிகளின் தலைமைக்குப் புட்டுப்புட்டு வைக்கும் ஆற்றல் அதற்கு உண்டு என்பதை சமகாலப் போக்கைப் புரிந்து கொண்ட அனைவரும் ஏற்பர்.

தவிரவும், கருணா தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விட்டு ஓட்டமெடுத்த பின்னரும் சில நாள்கள் வரை அவருடன் கூடவிருந்த சகாக்கள் பலர் இப்போது விடுதலைப் புலிகளின் பக்கத்தில் -

எனவே, கருணாவுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் ஏதுமில்லை என்று அரசுத் தரப்பு உதட்டளவில் என்ன கூறினாலும், உள்ளளவில் எது யதார்த்தம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரியாத நிலையில் புலிகளின் தலைமை இல்லை என்பதே உண்மை.

அரசுத் தரப்பின் கவனிப்பிலும், பராமரிப்பிலும், பாதுகாப்பிலும் கருணாவும் அவருடன் சேர்ந்த ஒரு சிலரும் இருக்கும் வரை அரசு - புலிகள் தரப்பிடையே கசப்புணர்வு நீங்கி, அமைதி முயற்சிகளுக்கான நல்லெண்ண சூழ்நிலை உருவாவதற்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

கருணாவின் செயற்பாடுகளைக் கட்டி வைத்துக் கொண்டு, காலம் வரும் போது அவரைப் பயன்படுத்தலாம் என்று அரசுப் பக்கம் இப்போதைக்குத் திட்டமிட்டாலும், அரசுக்குள் ஊடுருவியிருக்கும் சில சக்திகள் அதற்கு விடுவதாயில்லை என்றும் சில தகவல்கள் கசிந்துள்ளன.

அரசுக்குள் பலம் பெற்றிருக்கும் பேரினவாதப் போக்குச் சக்திகள் இப்போது அரச படைகளுக்குள்ளும் தங்களின் ஆதிக்கத்தை மெல்ல, மெல்ல ஊன்றுவதில் கரிசனையும் கவனமும் காட்டி வருகின்றன.

கிழக்கில் புலிகளுக்கு எதிரான வன்முறைச் செயல்களைத் தூண்டி விடுவதன் வாயிலாக - கருணா விவகாரத்தை பூதாகாரமாக்கி - அதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு நிரந்தர வேட்டு வைக்க அவை சதிவலை பின்னுகின்றன.

அரசுக்குள் இருந்து கொண்டு, ஜனநாயக வழியில் சமாதான முயற்சிகளுக்குத் தடுக்குப்போட முடியாதவர்கள், ஒளிவுமறைவாக அதைச் செய்ய முயல்கின்றார்கள். படைத்தரப்புக்குள் தங்கள் வசம் வீழ்ந்துள்ளோரை அவர்கள் பயன்படுத்துவதாகவும் சந்தேகம் நிலவுகின்றது.

மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களில் புலிகளுக்கு எதிரான வன்முறைகளை - உயிர்ப்பலிவாங்கலை - கருணா குழுவினர் மூலமோ அல்லது படைகளில் உள்ள தங்களின் ஆள்களின் மூலமோ செய்வித்து விட்டு கருணா குழுமீது பொறுப்பைச் சுமத்தும் சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலமோ தங்களின் எண்ணத்தை ஈடேற்ற அவர்கள் முயல்கின்றனர்.

எது, எப்படியென்றாலும் இத்தகைய செயல்களின் விளைவு அமைதி முயற்சிகளுக்கு அடியோடு வேட்டு வைப்பதாகவே இருக்கும். இத்தகைய போக்குக்கு அரசுத் தரப்பு அனுமதி கொடுக்குமானால் - வினை விதைக்குமானால் - வினையைத்தான் அது அறுவடை செய்ய வேண்டியிருக்கும். இதனை அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

# இளைஞர் குழுக்களின் அடாவடிகளை அடக்க உடனடி நடவடிக்கைகள் மிகவும் அவசியம்!

## பெண்பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம்,மே8

குடாநாட்டில் இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த அடாவடிகளை அடக்க அதிகாரம் மற்றும் உரிமையுள்ளவர்கள் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

வீதிகளில் குறிப்பாகச் சந்திப் பகுதிகளில் நிற்கும் இளைஞர்களின் அட்டகாசத்தினால் பெண்கள் பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர்.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கைத்தொலைபேசிகளுடன் நிற்கும் வாலிபர் குழுக்கள் கல்வி நிலையங்களின் முன்பாகவும் பஸ் தரிப்பிடங்கள், சந்திகள் போன்ற இடங்களிலும் கூடி நிற்கின்றனர். அவர்களது தகாத நடவடிக்கைகளால் பெண்பிள்ளைகள் உடல், உளத் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

இந்தவகையில் அண்மையில் யாழ்ப்பாணம் நகரப்பகுதியில உள்ள பெண்கள் பாடசாலையொன்றில் கல்விகற்றுவரும் மாணவி ஒருவர் பரீட்சை முடித்து சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவரை வழிமறித்த இளைஞன் ஒருவன், நான உன் பின்னால் மூன்று நாள்கள் சுற்றுகின்றேன். நீ என்னைத் திரும்பிப் பார்க்கவில்லை' என்று கூறி சைக்கிளிலிருந்து மாணவியை இழுத்து வீழ்த்தினான்.

வீதியில் விழுந்த மாணவியின் கை முறிந்தது. இதனால், அவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற நேர்ந்தது. அத்துடன் அவர் பரீட்சைக்கும் தோற்றமுடியாமல் போயுள்ளது.

இதேபோன்று கோண்டாவில் உப்புமடப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் பாடசாலை விட்டு வந்த மாணவி ஒருவரை தன்னுடன் பேசமறுத்தார் என்ற காரணத்துக்காக இளைஞன் ஒருவன் தாக்கியுள்ளான்.

உரும்பிராய் சந்திப் பகுதியில் இரவுவேளைகளில் கூடும் இளைஞர் கும்பல் ஒன்று மதுபோதையுடன் காணப்படுகின்றது. அக்கும்பலில் உள்ளவர்கள் வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சாகசம் புரிந்து வருகின்றனர். இதனால், பலாலி வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனிடையே, கடந்தவாரம் இக்குழுவைச் சேர்ந்த ஓர் இளைஞர் சக நண்பர்களுடன் ஐந்நூறு ரூபா பந்தயம் பிடித்து நிர்வாணமாக ஓடினாராம்.

உரும்பிராய்ச் சந்தியில் இருந்து ஒஸ்கா வீதிவரையும் நிர்வாணமாகச் சென்று மீண்டும் அதே வீதியால் சந்திக்குத் திரும்பி வந்தாராம் அந்த இளைஞர். இவருக்குப் பின்னால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒளியை அவர் மீது பாய்ச்சியபடி சென்றனவாம். இச்சம்பவம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கோண்டாவில் பகுதியில் மாணவர்கள் சிலர் தம்முடன் பேச மறுக்கும் மாணவிகளின் வீட்டு வாசல்களில் தேங்காய் உடைத்து பூக்களைத் தூவி பில்லி சூனிய அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

இந்த அடாவடிக் கும்பல்களின் இலக்குப் பெரும்பாலும் பெணபிள்ளைகளாகவே உள்ளது. பாதிப்படையும் பெண்பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்கால நலன்களை எண்ணி அஞ்சி அடாவடிககாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர். இதனைத தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் இளைஞர் குழுக்கள் தமது அட்டகாசங்களைத் தடுப்பாரின்றித் தொடர்கின்றனர்.

இந்நிலையில், சமூக நலனில் அக்கறை கொண்டவர்கள், கலாசாரத்தைப் பேணுவோர், சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் என அனைத்துத் தரப்பினரும் வெறும் எச்சரிக்கைகளுடன நிறுத்திக்கொள்ளாது, அடாவடிக் கும்பல்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள் உட்படப் பொதுமக்கள் அனைவரும் கருத்துத் தெரிவித்தனர்.(ஒ-68)

# 2 ஆயிரம் பேரின் அடையாள அட்டைகள் யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மே8

கொழும்பில் இருந்து ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் விண்ணப்பித்திருந்தவர்களில் சுமார் இரண்டாயிரம் பேரின் தேசிய அடையாள அட்டைகளே இவ்வாறு எடுத்து வரப்பட்டுள்ளன என்றும் -

பாடசாலை அதிபர் மூலமாகவும் கிராம சேவையாளர்களூடாகவும் விண்ணப்பித்தவர்களின் தேசிய அடையாள அட்டைகள் இவற்றுள் அடங்கும் என்றும் -

யாழ். செயலக ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். செயலகம் ஊடாக அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்த பாடசாலை அதிபர்கள், கிராம சேவையாளர்கள் தாம் விண்ணப்பித்த உரிய அடையாள அட்டைகள் வந்துள்ளனவா என்பதைச் சரிசெய்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அவர் தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த சில மாத காலமாக வவுனியாவில் தேங்கியுள்ள தேசிய அடையாள அட்டைகளின் நிலை குறித்துக் கேட்டபோது -

அவற்றினைப் பெற்று உரியவர்களிடம் கையளிக்க தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# மாணவர்களுக்கு முன்மாதிரியாக ஆசிரிய சமூகம் திகழ வேண்டும்!

## கல்விப்பணிப்பாளர் வலியுறுத்து

வலி.தெற்கு,மே8

பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் வருகை தரும் நேரம், மாணவர்களை ஆசிரியர்கள் வரவேற்கும் நிகழ்வாக அமைய வேண்டும். அதற்கமைய மாணவர்கள் வருகைதர முன்னர் உரிய நேரத்திற்கு ஆசிரியர்கள் வருகை தந்துவிடவேண்டும் என வலிகாமம் கல்விப்பணிப்பாளர் ரெஜினா இருதயநாதன் தெரிவித்துள்ளார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றும் போது கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தி தருவனவாக இல்லை. இதுதொடர்பான ஆய்வினை மேற்கொண்டு குறைவான பெறுபேற்றைப்பெற்ற பாடசாலைகளுக்கு விசேட திட்டங்களைத் தயாரித்து பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ள அதிபர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விசேட வகுப்புகளை ஒழுங்குசெய்து அதில் கலந்துகொள்ளும் மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் தகுந்த பாதுகாப்பைச் செய்துகொடுக்கவேண்டும்.

5ஆம் தரப் பரீட்சை முடிவுகளிலும் வீழ்ச்சியே உள்ளது. பாடத்திட்டத்திற்குப் பொருத்தமில்லாத பயிற்சிகளை வழங்கியமையே இந்த வீழ்ச்சிகளுக்குக் காரணம் எனத் தெரியவருகின்றது.

இம்முறை பயிற்சிப் பரீட்சைக்கான கேள்வித்தாள்களை கோட்ட ரீதியாக அல்லது வலய ரீதியாக ஆசிரியர்கள் இணைந்து பாடத்திட்டத்துக்கமையத் தயாரிக்கவேண்டும.

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்துக்கு வலிகாமம் வலயத்திற்குட்பட்ட 4 கோட்டங்களைச் சேர்ந்த சுமார் 140 பாடசாலை அதிபர்கள் வருகை தந்திருந்தனர். (ப-ரி-152)

### நாளை

சித்திரை 27
ஞாயிற்றுக்கிழமை
(09.05.2004)
திதி : பஞ்சமி
பகல் 2.50 வரை
நட்சத்திரம்: பூராடம்
மாலை 5.28 வரை
சுபநேரம்: 8.54 - 10.24
ராகுகாலம்: 4.24 - 5.54
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

செயலாற்றல் நிறைந்த அறிவாளிகளிடம் நல்லனவற்றைச் செய்யக்கூடிய அதிகாரம் இல்லாமல் இருப்பதுதான் மிகப் பெரும் சாபக்கேடு.

# சமுர்த்தி முத்திரை விநியோக ஆரம்பக்கட்டப் பணி ஆரம்பம்

தெல்லிப்பழை,மே8

குடாநாட்டில் உலர் உணவு நிவாரணம் பெற்றுவருவோரில் கணிசமானோருக்கு நிவாரண உதவி விரைவில் நிறுத்தப்படவுள்ளது. இதனால் வறுமைக்கோட்டிக்குக் கீழுள்ள குடும்பங்களுக்கு சமுர்த்தி முத்திரைகளை வழங்குவதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பங்களுக்கே சமுர்த்தி நிவாரண முத்திரைகள் விநியோகிக்கப்படவுள்ளன. எனினும் இந்த நிவாரண முத்திரை விநியோகப் பணிகளில் ஏற்கனவே சமுர்த்தி சேமிப்பு சிறுகுழுக்களில் அங்கம் வகித்து வருவோருக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிப்போரையும் உயர் பாதுகாப்பு வலயங்களில் சொந்த வதிவிடங்களாகக் கொண்டு மீளக்குடியமர முடியாதிருப்போரையும் தவிர நிவாரணம் பெற்ற ஏனையோரது நிவாரண உதவிகள் விரைவில் நிறுத்தப்படவுள்ளன. இந்நிலையில் நிவாரணம் பெற்றுவந்த அனைவருக்கும் சமுர்த்தி நிவாரண உதவிகள் உடனடியாகக் கிடைக்கும் வாய்ப்பு இல்லையென்றே கூறப்படுகின்றது. (ஒ-150)

# இணுவிலில் நாளை ஞாயிறன்று மணிமண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மே8

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில் மணிமண்டபத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மணிமண்டபத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பார்.

ஆசியுரைகளை ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்கள், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டி, அருட்கவி சி.விநாசித்தம்பி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப்பீடாதிபதி தி.கமலநாதன், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து 'ஐங்கரன் அமிர்தம்' நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது. வெளியீட்டுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸும், மதிப்பீட்டுரையை கலாநிதி சி.சிவலிங்கராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வின் இறுதியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் எஸ்.குமாரசுவாமியின் இசைநிகழ்வும் இடம்பெறும். (எ-10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
24 - 04 - 1953

உதிர்வு
08 - 04 - 2004

## அமரர் வேலுப்பிள்ளை இராஜரட்ணம் (செல்வம்)

(உரிமையாளர், R.B. ஆசனப்பதிவகம், R.B. கொமினிக்கேஷன்,
அன்னை வேளாங்கன்னி களஞ்சியம், அனித்தா ரான்ஸ்போட்)

காற்றோடு வந்த செய்தி கனவெனவே போகாதோ?
கலங்கி வாடுகிறோம் - உங்களைக் கண்ணீரில் தேடுகின்றோம்.
கள்ளம் கபடமற்ற உங்களை கண் வைத்தானோ காலன்?
பாவம் தணிய சுமையிறக்கிப் போனீர்கள் அப்பா!
நாங்கள் காலத்தை இருளாயாக்கிக் கண்ணீரைக் குளமாயாக்கி
வாழ்வதைப் போராயாக்கி வாழாமல் வாழுகிறோம்
எம்மையெல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள் அப்பா?
மெழுகு போல உங்களை உருக்கி எம்மையெல்லாம் வாழவைத்தீர்களே அப்பா!
உங்கள் பிரிவு எம் செந்நீரைக் கண்ணீராக மாற்றியது.
விண் ஆசி எங்களிலே வந்துமே படியும் வரை
மண் வாசி எங்களுக்கு மீட்சியே இல்லை அப்பா!
துடுப்பற்ற தோணியாய் துடிக்கும் எமைக் கரைசேர்க்க
துரிதமாய்ப் பூவுலகில் மீண்டொருநாள் வாருங்களப்பா!
இறைவனோடு சங்கமித்த உங்களைச் சாந்திப் பூக்கள் தழுவட்டும்.
*ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!*

கடந்த 08.04.2004 அன்று காலமான எம் குடும்பத் தலைவரின் மறைவுச்செய்திகேட்டு இரங்கல்கள் தெரிவித்தோருக்கும், மலர்வளையம், கண் ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்கியோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்டு எம் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (08.05.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

*No.19, B.A. தம்பி லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

மனைவி, பிள்ளைகள்.

(31719)(34-12-13)

# தென்பகுதியில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'ஹயஸ்' வான் யாழ்ப்பாணத்தில் விற்பனை!

## மோசடியுடன் தொடர்புடைய இளைஞர் கைது!

யாழ்ப்பாணம்,மே8


'ஹயஸ்'வானை தென்பகுதியில் இருந்து வாடகைக்கு அமர்த்தி யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்த இளைஞர் அதனை நான்கு மாதங்களாக வைத்திருந்து விட்டு விற்று விட்டார்.

இச்சம்பவம் குறித்து மேலும் கூறப்படுவதாவது:-

இரத்மலானைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து யாழ்ப்பாணத்தைச சேர்ந்த இளைஞர் ஒருவர், 'ஹயஸ்' வானை வாடகைக்குப் பெற்றுள்ளார். 15 நாள்கள் தவணையில் இவ்வாகனத்தைப் பெறுவதற்காக அந்த இளைஞருக்கு நண்பர் ஒருவரும் உதவியுள்ளார். கடந்த நான்கு மாதங்களாக தனது வாகனத்தை மீளப்பெறுவதற்காக அதன் உரிமையாளர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. இதனையடுத்து சாட்சியாக நின்ற நண்பரிடம், வாகனத்தை வாடகைக்குப் பெற்ற இளைஞனின் விலாசத்தைப் பெற்றுக்கொண்ட உரிமையாளர் யாழ்பாணம் வந்தார். யாழ்.கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த அந்த இளைஞர் தொடர்பாக யாழ்பொலீஸாரிடம் முறைப்பாடு செய்தார். இதனையடுத்து குறிப்பிட்ட இளைஞனை நேற்று முன்தினம் காலை கைதுசெய்த யாழ்.பொலீஸா விசாரணைகளை மேற்கொண்டனர். அப்போதே இளைஞர் மேற்கொண்ட பலமோசடிகள வெளிவந்தன.

தென்பகுதியிலிருந்து வாடகைக்கு அமர்த்திவந்த 'ஹயஸ்'வானை யாழ்ப்பாணத்தில் 3லட்சம் ரூபாவுக்கு அவர் விற்றுள்ளார். இதேபோன்று கார் ஒன்றையும் 6லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார், மேலும் கணனிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவற்றை இதேபோன்று பெற்று 85 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளார். கைது செய்யப்பட்ட இளைஞர் தடுப்புக்காவலில் வைக்கபட்டுள்ளார். பொலீஸ் விசாரணை தொடர்கிறது. இது தொடர்பில் இளைஞனுக்கு உடந்தையாக இருந்த பலரும் கைது செய்யப்படுவர் என யாழ். பொலீஸார் தெரிவித்தனர். (எ-9-6)

## காலத்தின் பதிவு



தண்ணீருக்காக மட்டுமா தவிப்பு? (படம்:தீபன்)

# மக்கள் முகம்



தற்காப்புக்கான ஜப்பானிய உள்ளகப் பல்கலைக்கழகத்தினால் சாம்பசிவ ஸ்ரீசோமாஸ்கந்த சிவாச்சாரியாருக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாகக் கலைப்பணியாற்றி வரும் ஸ்ரீதேவி வில்லிசைக்குழுவின் இயக்குநரான இவர் சித்திரம், சிற்பம், சித்தாந்தம், பண்ணிசை, வில்லிசை, கதாப்பிரசங்கம், கவிதை, ஜோதிடம் போன்ற பல்துறைகளில் வித்தகராவார். (-10)

* * *



தேசிய பொலீஸ் ஆணைக்குழுவின் உறுப்பினராக கலாநிதி எம்.கோபாலசுந்தரம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டி அமெரிக்கமிஷன் தமிழ்ப்பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் விலங்கு விஞ்ஞான பட்டதாரியுமாவார்.

விலங்கு வைத்திய நிபுணராகத் தமது பணியை ஆரம்பித்த இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் மிருக வைத்திய சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் விலங்கின அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராகவும் பணியாற்றிப் பல விருதுகளையும் பெற்றுள்ளார். (10-ரி)

* * *



தாவடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் யாழ்.மேல்நீதிமன்ற நீதிவான் கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம செய்து கொண்டார்.

இவர் ஓய்வுபெற்ற அதிபரும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் துணைப்பொதுச் செயலாளரும், தாவடி கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவருமாவார். (10-149)

* * *



பண்டத்தரிப்பு பனை தென்னை வள. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் கிருஷ்ணர் குணரத்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக கூட்டுறவுச் சங்கப் பணியாளர் நலன்புரிச்சங்கத் தலைவரும், சங்கப் பணியாளர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழுவின் உறுப்பினரும், கோப்பாய் வள்ளியம்மன் சனசமூக நிலைய முன்னாள் தலைவரும், தற்போதைய நிர்வாக சபை உறுப்பினருமாவார். (10-135)

* * *



தற்காப்புக்கான ஜப்பானிய உள்ளகப் பல்கலைக் கழகததினால் ஏ.ஆனந்தனுக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நிஷானந்தா நகைக்கடை உரிமையாளரான இவர், யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் உறுப்பினருமாவர். (-10)

## வன்னித் தேர்தலை ரத்து செய்யக் கோரி மனுத்தாக்கல்!

கிளிநொச்சி,மே8

வன்னி மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தலின்போது வாக்களிப்பு நிலையங்களில் மோசடிகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளதாகவும் அதனால் வன்னிமாவட்டத் தேர்தல்களை இரத்துச் செய்யுமாறும் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர் கே.சிவனேசன் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (ப)

## கடும் காற்றால் கூரைகள் சேதம்!

யாழ்ப்பாணம்,மே8

நேற்று முன்தினம் வீசிய பலத்த காற்றினால் நாரந்தனை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 7 வீடுகளின் கூரைப்பகுதி மோசமாக சேதமடைந்துள்ளன.

இதனால் அந்த வீடுகளில் இருந்த குடும்பங்கள் அனைத்தும் இருக்க இடமின்றிப் பெரும் அவதியுறுவதாக அப்பகுதி கிராம அலுவலர் கே.இராமேஸ்வரன் கவலை தெரிவித்துள்ளார். (ஒ-10)

## வள்ளம் கவிழ்ந்து இருவர் மரணம்!

கொழும்பு,மே8

மட்டக்களப்பு பெரிய கல்லாறு ஓடையில் நேற்று முன்தினம் மாலை வள்ளம் ஒன்று கவிழ்ந்ததில் அதில் பயணித்தவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்தின்போது வள்ளத்தில் 9 பேர் பயணம் செய்தனர். காயமடைந்தவர் ஆபத்தான நிலையில் பெரிய கல்லாறு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். (ஒ-ரி)

# மோசடிகள் புதிது புதிதாக...!

கைதடி,மே8

குடாநாட்டில் தற்போது விதம் விதமான மோசடிகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. அவற்றில் விநோதமான ஒரு மோசடி சமீபத்தில் கைதடி இராஜபுரி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

கைதடி இராஜபுரியில் உள்ள வீட்டில் மற்றவர்கள் வெளியே சென்று விட பெண்மணி ஒருவர் மட்டும் தனியாக பகல்வேளைகளில் இருப்பது வழக்கம்.

சம்பவதினம் மதியம் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் மேற்படி வீட்டுக்கு இருவர் வந்தனர். அவர்கள அப்பெண்ணிடம் 'உங்களது மருமகன கைதடிச் சந்தியில் நிற்கின்றார். வீட்டில் செத்தல்மிளகாய் இருப்பதாகவும் -

'அதனை நிறுத்து வாங்கிச் செலலுமாறும் - எங்களிடம் கூறினார். மிளகாய்க்கான பணத்தை அவரிடம் கொடுத்து விட்டோம்' என்று கூறினார்கள்.

அவர்கள் கூறியதை நம்பிய அந்தப் பெண்ணும் வீட்டில் இருந்த 30கிலோவுக்கும் மேற்பட்ட செத்தல் மிளகாயை மூட்டையாகக் கட்டி அவர்களிடம் கொடுத்திருக்கின்றார்.

அதனைப் பெற்ற அவர்களும் கிடைத்தது லாபம் என்று நழுவினார்கள்.

அன்றைய தினம் மாலையில் வேலை முடிந்து வீடு திரும்பிய மருமகன் வீட்டில் மிளகாயைக் காணாது விசாரித்திருக்கின்றார். அப்பொழுது தான் மாமியார் ஏமாற்றப்பட்ட விஷயம் தெரியவந்தது.

அண்மைக்காலமாக இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகள் யாழ் குடாநாட்டில் அதிகமாக உலா வருகின்றனர். இத்தகைய பேர்வழிகள் குறித்துப் பொதுமக்கள் விழிப்பாக இருப்பதே ஏமாறாமல் தப்பிக்க ஒரே வழியாகும். (ஓ-ரி-75)

# திருடப்பட்ட பொருள்களை மீட்க இப்படியும் ஒரு வழியுண்டு!

யாழ்ப்பாணம்,மே8

திருட்டுப்போன பொருள்களை தந்திரத்தால் மீட்ட சம்பவம் ஒன்று யாழ்பாணத்தில் அதிகாரம் மிக்க அரசு அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாகக் கூறப்படுவதாவது:-

இந்த அரச நிர்வாக அலுவலகத்தில் தண்ணீர் விநியோகக் குழாய்க்குப் பொருத்தவென வாங்கப்பட்ட 9 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருளகளை அங்குள்ள ஊழியர் ஒருவர் தனது பொறுப்பில் அறையொன்றில் வைத்திருந்தார். அந்த அறையை அலுவலக ஊழியர்கள் மட்டுமே பயன்படுத்திவந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் பெறுமதி மிக்க பொருள்கள் வைக்கப்பட்டிருந்த பைகளில் ஒன்று காணாமல் போயிருந்தது. இது தொடர்பாக அக் குறிப்பிட்ட ஊழியர் ஏனைய ஊழியர்களை விசாரித்தும் காணாமல்போன பொருள்களை திரும்பப் பெறமுடியவில்லை. இது தொடர்பாக அவர் உயர் அதிகாரியிடம் முறைப்பாடு செய்தார். ஆனாலும் பயன்கிட்டவில்லை.

இந்நிலையிலேயே குறிப்பிட்ட ஊழியர் மந்திரம் என்ற சொல்லை தந்திரமாகப் பயன்படுத்த எண்ணினார். பொருள்களை எடுத்தவர் குறிப்பிட்ட தினத்துக்குள் எடுத்த இடத்திலேயே மீண்டும் வைக்க வேண்டும் இல்லையேல் "செய்வினை செயவேன்" என்று கூறினார். இதன் விளைவாக 'செய்வினை' அச்சத்தால் திருடிய அனைதது்பொருள்களும் குறிப்பிட்ட அறைக்கு அருகே மீண்டும் வைக்கப்பட்டிருந்தன.

மந்திரத்தால் மாங்காய் பறிக்க முடிகிறதோ இல்லையோ களவு போன பொருள்களை தந்திரத்தால் மீட்கலாம் என்று நிருபித்துள்ளார் அந்த ஊழியர். (ஒ-75)

# அமெரிக்கா நிதியுதவி வழங்கும் வறிய நாடுகள் பட்டியலில் இலங்கை

கொழும்பு,மே8

அமெரிக்கா நிதியுதவி வழங்கும் நாடுகளில் 16 நாடுகளைக் கொண்ட வறிய நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் இணைத்துக் கொண்டுள்ளது.

அமெரிக்கா இந்த வருடத்துக்கான வெளிநாட்டு உதவித் தொகையாக 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. இந்த நிதியானது இலங்கை உட்பட 16 வறிய நாடுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

முன்னதாகத் தெரிவுசெய்யப்பட்ட 72 நாடுகளைக்கொண்ட பட்டியலிலிருந்து இந்த 16 நாடுகளும் அதிகூடிய வறிய நாடுகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. (ஒ-ரி)

# 'யு.எஸ்.எய்ட்' நிறுவன நிதியுதவியுடன் இழந்த கல்வியை மீளப்பெறும் திட்டம்

## சர்வோதயம் செயற்படுத்துகிறது

யாழ்ப்பாணம்,மே8

இழந்த கல்வியை மீளப்பெறுதல் என்ற கல்வித்திட்டத்தினை 'யு.எஸ். எய்ட்' என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் சர்வோதயம் முன்னெடுத்து வருகிறது.

இத்தகவலை 'யு.எஸ்.எய்ட்' நிறுவனத்தின் வெளிக்கள திட்ட இணைப்பாளர் திருமதி கிருபா அருட்செல்வி தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களில் போர், இடப்பெயர்வு மற்றும் வறுமை போன்ற காரணங்களால் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ள சிறுவர்களுக்கான கல்விச்செயற்பாடுகளை மேம்படுத்தும் முகமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டத்தில் முதற்கட்டமாக மயிலங்காடு, கரம்பைக்குறிச்சி, வரணி, மிருசுவில், காக்கைதீவு, ஊரெழு போன்ற கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு கல்வியில் பின்தங்கிய மாணவாகளுக்கு காலை, மாலை வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன என்றும் -

பாடசாலையிலிருந்து இடைவிலகிய சிறுவர்களை பாடசாலையில் மீண்டும் இணைக்கும் நடவடிக்கைகள் மேற கொள்ளப்பட்டு வருகின்றன என்றும்-

அத்துடன் இம்மாணவர்களுக்கு வருடந்தோறும் விளையாட்டுப்போட்டிகளும் நடத்தப்படவுள்ளன என்றும்-

அவர் மேலும் தெரிவித்தார்

இத்திட்டத்தின் கீழ் 377 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்றும் - இணைப்பாளர் தெரிவித்தார். (ஒ-ரி)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபருக்கு ஒரு வருடக் கடூழியம்

வலி.வடக்கு,மே8

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவருக்கு ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் தீர்ப்பளித்துள்ளார்.

குப்பிளான் தெற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த நபருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலீஸார் கசிப்பு உற்பத்திக்கான 860 டிராம் கோடாவை வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி இந்த நபர் மீது மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் நீதிமன்றத்திற்கு சமுகந்தராது இருந்த இவர் பிடியாணை மூலம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன்னர் ஆஜர்செய்யப்பட்டபோதே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஒ-86)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

அரச ஊழியரின் தனிப்பாவனையில் உள்ள Yamaha Newsmate 50 விற்பனைக்குண்டு. (பெற்றோல்) தொடர்புகளுக்கு: 127/2, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. (31690)

நல்ல அழகான Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31730)

தரமான Prima Broiler குஞ்சுகள், Prima பேட்டுக்குஞ்சுகள் 17.05.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்கூட்டியே பதிவுசெய்யவும். Suddi Farm, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் ( நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31729)

ஒரு சோடி இரண்டு வயதுடைய நல்லின கரும்சிவப்பு கிடாய் ஆடுகள், பால் இன ஜமுனாபாரி சினைமறி ஆடுகள் விற்பனைக்குண்டு. இல.57, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் (பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்).(31731)

கலர் மீன்கள், தொட்டிகள், கொககொடைல், ஆபிரிக்கன் லவ்பேர்ட்ஸ், யாவாபரட், லவ்பேட்ஸ் குருவிகள், கூடுகள், அடுக்குச் செவ்வரத்தம் பூங்கன்றுகள், மஞ்சள் மொசந்தாஸ் மற்றும் டல்மேசன், பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, யாழ்பபாணம். (31648)

புறோயிலர், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்தல் இலவசம். தொடர்பு: 1) மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில் NEW R.S.K. Farm, 2) உடுவில் பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய் வீதி, உடுவில், மதவடி NEW R.S.K. Farm.(31505)

நல்ல நிலையில் டாக்டரின் பாவனையிலுள்ள HONDA Civic 15 - Full Option கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr.P.அச்சுதன், புத்தூர்சந்தி, மீசாலை கிழக்கு, மீசாலை. T.P:0777 283757. (31605)

## தவறிவிட்டது

கெற்பேலி, மிருசுவிலைச் சேர்நத குமாரு பவானந்தி என்பவருடைய தேசிய அ.அ. (இல:837521076V) விசேட அ.அ (இல:091025237) பல்கலைக்கழக அ.அ. என்பன 03.05.2004 திங்கட்கிழமை கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி சுமங்கலி புடைவையகத்தில் ஒப்படைத்துதவவும்.T.P:0777 570511. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (31734)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், ஆறடி உயரம், 31வயது, M.Sc. Engineer U.S.A., B.Sc. Engineer Canada (உதயச்செவ்வாய்) மணமகனுக்கு B.Sc. அல்லது கூடிய தகைமையுள்ள அழகிய மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: விள.இல: 2255,மே/பா உதயன். (31696)

## பழக்கழிவுகளால் சுகாதாரக்கேடு

யாழ்நகரில் மினிபஸ் மற்றும் ஓட்டோக்கள் நிறுத்துமிடங்கள் அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகப் பழக்கடைகளில் இருந்து வீசப்படும் கழிவுகளினால் சுகாதாரக்கேடு ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக பெய்யும் மழையினால் பழக்கழிவுகளில் இருந்து அதிக துர்நாற்றம் வீசுகின்றது. இதனால், பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். (ப-12)

## சட்டத்தரணிக்கு மேல்நீதிமன்றில் அஞ்சலி

அண்மையில் காலமான சட்டத்தரணி வேலுப்பிள்ளை நடராஜாவுக்கு யாழ்.மேல்நீதிமன்றில் அஞ்சலி செலுத்தப்பட்டது. மேல்நீதிமன்ற நீதிபதி கேபி.எஸ்.வரதராஜா முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மல்லாகம், சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதிகளும் யாழ. சட்டத்தரணிகள் சங்கத் தலைவி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் உட்பட பல சட்டத்தரணிகளும் சட்டத்துறை பிரமுகர்களும் கலந்துகொண்டு மறைந்த சட்டத்தரணிக்கு அஞ்சலிசெலுத்தினர். (ப-ரி)

## இருப்பிடங்கள் அமைக்கத்திட்டம்

குடத்தனை,மே8

குடத்தனை மாளிகைத்திடல் அகதிமுகாமில் வசிக்கும் மக்களுக்கு வெகுவிரைவில் இருப்பிடங்கள் அமைத்துக்கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுதொடர்பாகக் கடந்த புதன் கிழமை அந்தமுகாமை வந்து பார்வையிட்ட யாழ்ப்பாணம் சி.எச்.எவ். நிறுவன அதிகாரி இத்தகவலைத் தெரிவித்தார்.

அமபன் கொட்டோடைப் பகுதியைச் சேர்ந்த மக்களே இம்முகாமில் வசித்து வருகின்றனர். (ஒ-ரி)

## மழையால் மரக்கறி விலையேற்றம்

கொடிகாமம்,மே8

தொடர்ச்சியாக மழைபெய்து வருவதால் கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

விளைநிலங்கள் மழைவெள்ளத்தில் மூழ்கியதால் பாகல், கத்தரி, மிளகாய், பயிற்றை என்பன அழுகி அழிவடைந்துவருகின்றன.

இதனால், பயிற்றங்காய் 20 ரூபாவில் இருந்து 70 ரூபாவாகவும், பாகல், கத்தரி 40 ரூபாவில் இருந்து 80 ரூபாவாகவும், மிளகாய் 40 ரூபாவில் இருந்து 100 ரூபாவாகவும் விலை அதிகரித்துள்ளன. (ப-74)

---

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் பெண்களுக்கான

**நவீன பயிற்சிகள் ஆரம்பம் - 15.05.2004**

★ பேசியல் வகைகள், மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை, கூந்தல் அலங்காரம், கேக் ஐசிங், பெயின்ரிங், சாறி வேலைப்பாடு, கைவேலைகள், கிறிஸ்ரல் அலங்காரம், முத்து வேலைப்பாடுகள், நவீன முறையிலான தையல்.

பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். பயில விரும்பும் பெண்கள் மே 15 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

**மகளிர் அபிவிருத்தி நிலையம்,**
இல.07, இரட்ணம் லேன், கே.கே.எஸ். றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (31709)(34-11-17)

---

## இளங்கலைஞர் மன்றம்
### நல்லூர்

### மாதாந்த இசைநிகழ்ச்சி

இடம்:-மன்றக் கலாமண்டபம்
காலம்:-09.05.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:-மாலை 4 மணிமுதல் 7 மணிவரை

**இசைக் கச்சேரி**

பாட்டு சங்கீத வித்துவான் திரு. A.K. கருணாகரன்
(கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட இசை விரிவுரையாளர்)

| | |
|---|---|
| வயலின் | :- இசைக் கலைமணி திரு. S. கோபிதாஸ் |
| மிருதங்கம் | :- இசைக் கலைமணி திரு. A.கண்ணதாசன் |
| கெஞ்சிரா | :- வித்துவான் திரு R.சிவராமன் |
| கடம் | :- வித்துவான் திரு. சதா வேல்மாறன் |
| முகர்சிங் | :- கலா வித்தகர் செல்வன் N. சதீஸ்குமார் |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(31738)(40-34-11-17) - மேற்படி மன்றத்தினர்.

---




---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### பட்டப்பின் படிப்புகள் பீடம்

பட்டப்பின் கல்வித் தகைமை (யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்)

| | | |
|---|---|---|
| பகுதி நேரம் I | : | கல்வியாண்டு 2003/2005 |
| பகுதி நேரம் II | : | கல்வியாண்டு 2002/2004 |
| முழு நேரம் | : | கல்வியாண்டு 2003/2004 |

**முதலாம் பருவத் தேர்வு**

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியைத் தொடரும் மாணவர்கள், பீடாதிபதி அலுவலகம், உயர்பட்டப் படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாகத்தில் கற்கைநெறியைத் தொடரும் மாணவர்கள் வியாபாரக் கற்கைகள் பீடத்திலும் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பற்றுச்சீட்டுடன் இ[illegible] எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வப் பீடங்களில் ஒப்படைத்தல் வேண்டும்.

ஒரு பாடத்திற்கான பரீட்சைக் கட்டணம் 100/=.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்
06.05.2004. (C/34743)(34-11-17)

---

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 18 ஆவது வெளியீடான

ஏழாலையூர் கவிஞர் **கு. றஜீபனின்**

## "வலிகளைத்தாங்கி"
### கவிதை நூல்

## வெளியீட்டு விழா



காலம் : இன்று (08.05.2004) சனிக்கிழமை 9.00 மணி
இடம் : யாழ். பல்கலைக்கழக கைலாசபதிக் கலையரங்கம்.

### நிகழ்வு கூறல்

| | | |
|---|---|---|
| தேவநயம் | - | V.சுமதீஸ்வரன் |
| வரவேற்புரை | - | S.ஜெசீதன் |
| வாழ்த்துரை | - | திருமதி S.அருள்நங்கை<br>திரு.சுரேஸ்ஆனந் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) |
| தலைமையுரை | - | கவி[illegible]ர் இ.முருகையன் |
| அறிமுகவுரை | - | கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி |
| வெளியீட்டுரை | - | கலாநிதி கி.விசாகரூபன் |
| முதற்பிரதி | - | திரு.திருமதி பாலசுப்பிரமணியம்<br>KVENTH EXPORT (INDIA) |
| சிறப்புரை | - | தமிழறிஞர் அகளங்கன் (வவுனியா) |
| ஆய்வுரை | - | கவிஞர் S.பத்மநாதன்<br>திரு.ந.சத்தியவேந்தன் |
| ஏற்புரை | - | நூலாசிரியர் |
| நன்றியுரை | - | திரு.ஓ.கே.குணநாதன்<br>(மேலாளர் - எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் மட்டக்களப்பு) |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

38, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். **எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்.**

விளம்பர அனுசரணை:
**சதீஸ் வீடியோ அன் போட்டோ**
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி Tel:0777 166686.

**ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ,**
இல.13, 14 பெரியகடை, யாழ்ப்பாணம்.
☎ 222 3139. (31737)(40-34-13-17)

**பேரம்பலம் சக நிறுவனம்,**
இல.54, 52 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

## வாழ்த்துகின்றோம்



இன்று சனிக்கிழமை
(08.05.2004) குடத்தனை
பொற்பதி புனித இராயப்பர்
ஆலயத்தில்
நன்றித் திருப்பலியை
ஒப்புக் கொடுக்கும்
முதல் குருமணி
அருட்திரு.
**தேவரட்ணம் செல்வரட்ணம்**
அடிகளாரின் இறைபணியும்,
சமூகப்பணியும்மென்மேலும் சிறக்க
இறையருள்வேண்டி வாழ்த்துகின்றோம்.

## வீடியோ கலாமினி
### அச்சுவேலி

**T.P: 0777 111018**

(C34744)(40-34-11-17)

யாழ்ப்பாணம்

# சாவகச்சேரி கடலேரித் தடையால் வாடும் குடும்பங்கள்...

சாவகச்சேரி கடலேரி கடந்த நான்கு வருடங்களாக அதி உயர் பாதுகாப்பு வலயமாக உள்ளதால் இக்கடலேரியில் தொழில் புரிந்து வருமானம் தேடிய ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தொழில்களை இழந்து பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பூநகரிக் கடலிலிருந்து பிரிந்துள்ள கிளாலி கடலேரி சாவகச்சேரி வரை பரவியுள்ளது. இந்தக் கடலில் மீன்பிடித் தொழில், தும்பு உற்பத்தி சுண்ணாம்புச் சூளை போன்ற தொழில்களில் ஈடுபட்டவர்களே தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரியிலிருந்து கச்சாய் வரையான கடலேரி அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கடலுக்குள் எவரும் செல்லாத வகையில் மறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அல்லாரை தம்பு தோட்டத்தில் உள்ள படை முகாமின் துப்பாக்கி சுடும் பயிற்சிக்காக இக்கடலேரி பயன்படுவதால் கடலில் தொழில செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கோவில்குடியிருப்பு, அல்லாரை போன்ற கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கும், தும்புத்தொழில், சுண்ணாம்புத்தொழில் ஆகியவற்றில் ஈடுபட்ட பொதுமக்களும் கடலேரி தடையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

கடற்றொழில்முன்னைய காலங்களில் இப்பிரிவுகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் களங்கண்டிகளை அமைத்து இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டதுடன் கடலில் நடந்து சென்றும், வள்ளங்களில் சென்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். அத்துடன் கடலேரியில் நீர் அதிகமாகக் காணப்படும் பருவகாலங்களில் நவாலி, மாதகல் போன்ற இடங்களிலிருந்து சிறிய படகுகளில் வருவோர் இப்பகுதிகளில் வாடி அமைத்துத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். இவர்களை விட நடந்து சென்று வலை வீசி மீன்பிடிப்பவர்களும், இரவு வேளைகளில் சூள் எனப்படும் வெளிச்சம் காட்டி மீன் பிடிப்பவர்களும் இக்கடலேரியில் தொழில்செய்து வந்தனர்.



செய்திக் கட்டுரை

இக்கடலில் பிடிக்கப்படும் மீன் மற்றும் இறால் ஆகியவை காலையிலேயே சாவகச்சேரிச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு விற்கப்பட்டன.

2000 ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது கடற்றொழிலாளர்கள் இக்கடலில் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் கைவிட்டுச் சென்று இன்றுவரை மீட்கப்படாத நிலையில் உள்ளன.

**தும்புத் தொழில்**

முன்னர் சாவகச்சேரி, மீசாலை, கச்சாய் ஆகிய இடங்களில் இயங்கிய தும்பு உற்பத்தித் தொழில் நிலையங்கள் இயங்கியதால் சாவகச்சேரியிலிருந்து கச்சாய் வரையான நான்கு மைல் நீளமான பகுதிகளில் தும்பு உற்பத்தியினை பல குடும்பங்கள் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டுவந்தன.

சாவகச்சேரி, மீசாலை, அல்லாரை, கச்சாய் போன்ற இடங்களில் உள்ள தென்னந் தோட்டங்களில் தேங்காய் பொச்சு மட்டைகளை கொள்வனவு செய்து அவற்றை இக்கடலேரியில் புதைத்து வைத்துப் பதப்படுத்தி தும்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்தனர்.

தும்பு உற்பத்தித் தொழில் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் கயிறு, தும்புத்தடி, துடைப்பம் போன்ற உற்பத்திப் பொருள்களுக்குரிய தும்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த மக்களிடமிருந்து பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுவந்தது. இதனால் தும்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஆயிரக் கணக்கானோரும் தொழில் நிலையங்களில் கடமை புரிந்த நூற்றுக்கணக்கான பெண்களும் நிரந்தர வருமானத்தைப் பெறக் கூடியதாக இருந்தது. இந்தத் தொழில் நிலையங்களை சிறு கைத்தொழில் திணைக்களமே நடத்தியதால் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதில் சிரமம் இருக்கவில்லை. தும்புத் தொழில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மிகச் சிறப்பாக இயங்கியபின் ஒரு காலத்தில் இயந்திரங்கள் மூலம் தும்பு உற்பத்தியும் தும்பு உற்பத்திப் பொருள்கள் தயாரிப்பும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

1990 இற்குப் பின்னர் தென்னிந்தியாவிலிருந்து தும்பு உற்பத்திப் பொருளகளைக் கொண்டுவராததால் இப்பகுதிகளில் தும்பு உற்பத்தி மிகவும் அதிகரித்து பலருக்கு வேலை வாய்ப்புக்

தென்மராட்சிச் செய்தியாளர்

கிடைத்ததுடன் பல குடும்பங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாகவும் இருந்தது.

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடலேரி தடைசெய்யப்பட்டதால் தும்பு உற்பத்தியும் முற்றாகச் செயலிழந்து பல குடும்பங்களின் வருமானம் தடைபட்டது. இக்காலப்பகுதியில் சாவகச்சேரி, மீசாலை, சங்கத்தானை ஆகிய இடங்களில் இயங்கிவந்த தும்பு உற்பத்திப் பொருள்கள் செய்யும் நிலையங்கள் சேதமடைந்ததுடன் அங்கிருந்த உபகரணங்களும் சேதமடைந்தன. தும்பு உற்பத்தி நிறுத்தப்பட்டதால், இத்தொழில்களை மீள இயக்க எவரும் முன்வராததால் அவை இன்று மூடப்பட்டுக் காணப்படுகின்றன. இங்கு வேலைசெய்த நூற்றுக்கணக்கான யுவதிகள் தொழிலிழந்துள்ளனர்.

கடந்த வருடம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினரால் கச்சாயில் தும்பு உற்பத்திப் பொருள்கள் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான தும்பு தென்னிலங்கையில் இருந்து கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு ஏ-9 வீதி திறக்கப்பட்டதையடுத்து பெருமளவு தும்பு உற்பத்திப் பொருள்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டு வரப்படுவதால் இங்கு தயாரிக்கப்படும் தும்பு உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்த முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சுண்ணாம்புச் சூளை**

சுண்ணாம்பு உற்பத்திக்குத் தேவையான சிப்பிகளைச் சுடும் பணி இந்தக் கடலேரியில் கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

சிப்பிகளைச் சுடுவதற்கு தேவையான கடற்கழிவுகள் கடற்கரையில் ஒதுங்குவதால் அதனைப் பயன்படுத்தி சிப்பி சுடப்பட்டது.

கடற்கரை பாவனைக்குத் தடை செய்யப்பட்டதால் பல குடும்பங்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர். இந்தக் கடலேரியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடை என்று நீக்கப்படும் என கடலால் நன்மையடைந்த பல குடும்பங்கள் ஏங்கித் தவிக்கின்றன.

# தேவை அறிந்து உதவிடும் தோழன் செஞ்சிலுவை

**1828** ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் நாள் சுவிஸ் நாட்டில் பிறந்த ஹென்றி டுனான்ட் (Hentry Dunant) என்பவர் தான் நேரில் பார்த்து அனுபவித்த யுத்த அவலங்களைக் கருத்திற் கொண்டு, யுத்தத்தில் காயப்படுவோரைப் பாதுகாக்கவும், இயற்கை அனர்த்தங்களினால் அல்லல் படுபவர்களுக்குக் கைகொடுக்கவும் ஆர்வமுற்றுத் தனிமனித முயற்சியினால் முதலில் சிறியதொரு குழுவை உருவாக்கிப் பணியாற்றத் தொடங்கினார். இச்செயற்பாடானது அது தோன்றிய காலத்திலிருந்து அவலநிலைக்கு உட்பட்டு இருப்போருக்குப் பாதுகாப்பும், உதவியும் வழங்கி வருகின்றது.

> **உலக செஞ்சிலுவை தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனைமுன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

சாதாரணமான சூழ்நிலைகளில், மனிதன் தான் வழமையாக வாழ்ந்துவரும் ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தில் சட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றான் தன் சீவியத்திற்கு வேண்டிய வாழ்வாதாரங்களை தன் அருகிலேயே கண்டு கொள்கின்றான்.

ஆனால் சமூகம் தனது நியாயமான பணிக்கேற்ற நிலையில் இருந்து நிலை தடுமாறி சட்டங்கள் மீறப்பட்டு, மனிதனின் இயற்கைச் சூழல் குழப்பத்திற்குட்படுத்தப்பட்டு, அவனது பாதுகாப்பும், சுகாதாரமும் சீவியமும் கூட பயமுறுத்தப்படும் சூழ்நிலைகள், ஆயுதமேந்திய மோதல்கள், இயற்கையழிவுகள் போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்தகைய வேளைகளில், பாதிக்கப்பட்டோருக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்கச் செஞ்சிலுவை பாடுபடுகிறது.

செஞ்சிலுவை அமைப்பின் தொடக்கம் உண்மையில் அடக்கமானதும், சிறிய அளவினதாகவுமே அமைந்தது. ஐந்து பேரைக்கொண்ட ஒரு குழுவினர் தமக்குள் ஓர் இணக்க ஒப்பந்தத்தினை நிறைவேற்றிப் போரில காயமடைந்தவர்களைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு வேண்டிய பொருள் உதவியை செய்வதுமே நோக்கமாகச் செயற்பட்டனர். தற்போது இவ்வியக்கம் 130 மில்லியன் அங்கத்தவர்களையும், 178 தேசிய செஞ்சிலுவைச் செம்பிறைச் சங்கங்களையும், அதன் உலகக் கூட்டிணைப்பான செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் இணைக்குழுவையும் கொண்ட உலகளாவிய ஓர் இயக்கமாக வளர்ந்து செயற்படுகின்றது. சர்வதேச மனித நலநோக்கச் சட்டங்களும் கணிசமான அளவிற்கு அபிவிருத்தி அடைந்துள்ளன.

1949 ஆம் ஆண்டின் ஜெனீவா இணக்க ஒப்பந்தங்களும், அவற்றிற்கான 1977ஆம் ஆண்டின் மேலதிக முற்குறிப்புக்களும் பல்வேறு சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டோரின் பாதுகாப்பிற்கு வழிவகுக்கின்றன. செஞ்சிலுவை இயக்கத்தினால் ஆற்றப்படும் சேவைகளுக்கும், நிவாரண விநியோகங்களுக்கும், வருடம் ஒன்றிற்கு பலகோடிக்கணக்கான பணம் திட்டமிடப்பட்டு செலவிடப்படுகின்றது. இந்த உதவிகள் உலகில் பலபாகங்களிலும் வாழ்கின்ற எண்ணிலடங்கா மக்களுக்குப் போர்ச் சூழலிலும், சமாதான வேலைகளிலும் கூட அவர்களின் அருந்தற்பாடுகளைக் குறைக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

செஞ்சிலுவை, அதன் மனிதநல



இலட்சியங்களால் உந்தப்பெற்று வழிநடத்தப்படுகிறது அதன் செயல்கள், நடவடிக்கைகள் இதற்கான திட்டவட்டமான வெளிப்பாடாக அமைகின்றன. இவ்வியக்கம் தான் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ, இனத்துக்கோ, மதத்துக்கோ, பண்பாட்டிற்கோ உரியதன்று என்பதைகாட்டும் முறையில் உலகம் முழுவதும் விரிந்து பரந்து கிடக்கின்றது. துன்ப அருந்தற்பாட்டிற்கு ஆளானோர் உலகப் பொதுவானதாக உள்ளது. துன்ப அருந்தற்பாட்டிற்கு ஆளானோர் எல்லோருககும் அவர்கள் எங்கிருந்தாலும், உதவியும் பாதுகாப்பும் வழங்கச் செஞ்சிலுவை பாடுபடுகிறது. 1863 ஆம் ஆண்டு இவ்வியக்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாகப் பரிணமித்தது. தற்போது உபயோகிக்கப்படும் செஞ்சிலுவைச் சின்னம் 1864 இல் தெரிவு செய்யப்பட்டது. இச்சின்னம் வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவை ஆகும். அரேபிய நாடுகளில் செம்பிறைச்சின்னத்தையும் இணைத்து இயங்க ஏற்றுக் கொள்ளப்பட்டது.

செஞ்சிலுவை இயக்கம் 7 அடிப்படைக் கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு செயற்படுகின்றது (Seven Fundamental Principles)- 1965இல் உருவானவை. அவையாவன:-

மனிதாபிமானம் (Humanity), பாரபட்சமின்மை (Impartiality), நடுநிலைமை (Neutrality), சுயாதீனம் (Independance), தொண்டர் சேவை (Voluntary Service), ஒருமைப்பாடு (Unity), உலகளாவிய தன்மை (Universality).

செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவர்களும், தொண்டர்களும் இந்த ஏழு அடிப்படைக் கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டு சேவை செய்யவேண்டியவர்களாவர். "மனிதாபிமான உந்துதல்" என்பது இவ்வமைப்பில் சேவையாற்றும் அங்கத்தவாகள், தொண்டர்களிற்கு மட்டும் உரியதல்ல; இவர்களது சேவை மூலம் புதிய அங்கத்தவர்களையும், தொண்டர்களையும் உருவாக்கி மேலும் மனிதாபிமானச் சேவைகளை முன்னெடுக்க முடிகின்றது.

**தி. உதயசூரியன்**
**உப தலைவர்**
**இ. செ. சி. ச. யாழ். கிளை**

1949ஆம் ஆண்டு செய்யப்பட்ட நான்கு ஜெனீவா சாசனங்கள் கீழ்க் காணும் வகையினரை பாதுகாக்க உதவுகின்றன. இச்சாசனங்களை ஏற்று 178 நாடுகள் ஒப்பமிட்டுள்ளன. இலங்கையும் அதனுள் ஒன்றாகும்.

(1) களத்தில் காயமுற்றவர்கள் அல்லது சுகயீனம் உற்றவர்கள்.

(2) கடலில் காயமுற்றவர்கள் அல்லது சுகயீனமுற்ற அல்லது தத்தளிக்கின்ற வீரர்கள்.

(3) போர்க் கைதிகள்.

(4) ஆயுதப்போரில் சிக்கிய குடிமக்கள்.

செஞ்சிலுவை இயக்கமானது மூன்று பிரிவினர்களை (Three Components) கொண்டுள்ளது.

அவையாவன:-

(1) செஞ்சிலுவைச் சர்வதேச குழு (International Committee of Red Cross - ICRC) ஜெனீவாவில் இதன் தலைமையகம் உள்ளது. இக குழுவானது சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஒரு தனிநபரினால் உருவாக் கப்பட்டதாயினும் இதனுடைய தொழிற்பாடுகளும், முன்னேற்றங்களும் சர்வதேச மயமாகியுள்ளன. செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் பிரதிநிதிகள் உலகில் 60 நாடுகளுக்குச்சென்று வதிவிடப் பிரதிநிதிகளாக கடமைபுரிகின்றனர். ஏறத்தாழ 15 ஆயிரம் ஊழியர்கள் கடமை புரிகின்றனர். இவர்களில் பலர் அந்தந்த நாட்டுப்பிரஜைகளாவர் செயற்பாட்டுப் பிரதிநிதிகள் தமது முக்கிய கடமைகளாக பாதுகாப்பளித்தல், யுதத்தில் அல்லது வேறு அனர்த்தங்களினால்பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதோடு சகலவிதமான தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வர். மனிதாபிமான நடவடிக்கைகளில் உரிய முறையில் செயற்படுத்துவதற்காக அண்டைய நாடுகளில் நடைபெறும அபாய நிகழ்வுகளை அறிந்து உரிய நேரத்தில் நடவடிக்கைகளை மேற கொள்வதற்காக பிராந்திய பிரதிநிதிகள் முக்கிய நாடுகளில் இருந்து செயற்படுகின்றனர். செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஒரு நாட்டில் வந்து செயற்படவேண்டுமாயின் அந்த நாடு அழைப்பு விடுக்கவேண்டும். இலங்கையிலிருந்து 1989இல் அழைப்பு கிடைக்கப்பெற்று வருகைதந்த இந்தக்குழுவினர் சேவையாற்றுகின்றனர். கொழும்பில் தமது தலைமையகத்தையும் மற்றும் யாழ்ப்பாணம். மன்னார், மட்டக்களப்பு, கிளிநொச்சி, மடு, மல்லாவி, மூதூர், புதுக்குடியிருப்பு, வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில உப-அலுவலகங்களையும் ஸ்தாபித்து இந்தக்குழு பணியாற்றுகின்றது.யாழ். மாவட்டத்தில் இந்தக்குழு தனது பணிகளை சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு அமைவாகவும் அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைவாகவும போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் - பாதிப்படைந்தபகுதியை தரமுயர்த்துவதற்கும், நிவாரண உதவிகள்வழங்கியும் பல்வேறு உதவிகளைச் செய்தும்சிறப்பாகச் சேவையாற்றுகிறது.சிறைக்கைதிகளின் பாதுகாப்பிற்கும் அவர்களது பிரசன்னம் உதவுகிறது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மூலமாகவும் சில பணிகள் ஆற்றப்படுகின்றன. செஞ்சிலுவை அமைப்பின மூலாதாரங்களாக சர்வதேச செஞ்சிலுவை விளங்குகிறது.

2) செஞ்சிலுவைச் செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனம (Internationl Federation of Red Cross / Red Cresent - I.F.R.C.) ஜெனீவாவில் இதன் தலைமையகம் இயங்குகின்றது.

இச்சங்கமானது 1919இல் உருவாக்கப்பட்டது. தேசிய சங்கங்களுக்கு உதவும் கரங்களாக சம்மேளனம் திகழ்கிறது. தேசிய சங்கங்கள் தமது மனிதாபிமானப்பணிகளை மேற்கொள்வதற்கு நிதிவசதிகளை பெற்றுக் கொடுப்பதும் போரினால் அல்லது இயற்கை அனர்த்தங்களினால் பாதிகக்கப்பட்டோருக்கு வேண்டியபணிகளைச் செய்துவாழ்வியலை முன்னேற்றுவதற்கும் பிற தேசிய சங்கங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் உதவுவதுண்டு.

செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு காலத்திற்குக்காலம் பயிற்சிகளை வழங்குவதும் இதன் அடிப்படைக் கடமைகள் ஆகும். கொழும்பில் தலைமையகம் அமைந்து இலங்கையின் தேசிய சங்கத்திற்கு மிகுந்த அனுசரணையாளர்களாகப் பணியாற்றிவருகின்றது.

3) தேசிய செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்கள் (Nationl Red Cross / Red Crescent Societies)

இது1864 இல் உருவாக்கப்பட்டது. அரேபிய நாடுகளில் செம்பிறையை உபயோகிக்க சட்டவலுவான உரிமை வழங்கப்பட்டுள்ளது. 178 நாடுகளில் தேசிய சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்குகின்றன. தேசிய சங்கங்கள் நிதியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, செஞ்சிலுவை சம்மேளனம் பிற தேசிய சங்கங்கள் மூலமாகப் பெற்றுச் செயற்படுகின்றன. இதனை விட சுயமாக நிதியை மக்களிடமிருந்தும் சேகரிக்கப்பதுடன், வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களை (Fund Raising Project) நடைமுறைப் படுத்துவதன் மூலமும் நிதியைப் பெறுகின்றன. தேசிய சங்கங்கள் (National Society) அந்நாடுகளின் அரசாங்கங்களுக்கு மனிதாபிமானச் சேவைகளிலும் உடல்நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரண மற்றும் தற்காலிக

(பத்தாம் பக்கம் பார்க்க)

# புது மெருகு பெறவிருக்கும் பின்தங்கிய கிராமம்

தென்மராட்சி,மே8

நாவற்குழிப் பகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதியாகக் காணப்படும் பள்ளம் என்னும் கிராமம் விரைவில் புதுமெருகு பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் வேண்டுகோளிற்கிணங்க அண்மையில் இக் கிராமத்தைப் பார்வையிட்ட யாழ்.அரச அதிபர் செபத்மநாதன் இக்கிராமத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார். இங்கு தூர்ந்து போயுள்ள ஒரு குளத்தையும் வீதிகளையும் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜ் தெரிவித்தார். (ப-117)


உ

இணுவில்

## அருள்மிகு ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் திருக்கோயில்

## மணிமண்டபத்திறப்பு விழா

## அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் சித்திரை மாதம் 27 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (09.05.2004) மாலை 6 மணிக்கு வரும் சுபவேளையில் எங்கள் குலதெய்வம் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரின் திருவருளாலும் பெரியோர்களின் ஆசியாலும் ஆலயத்தின் மேற்கு வீதியில் எம்மால் அமைக்கப்பெற்ற புதிய மணிமண்டபத் திறப்புவிழா நடைபெற கைகூடப்பெற்றுள்ளது. தாங்கள் யாவரும் அன்று காலை 6.00 மணிமுதல் நடைபெறும் பெருஞ்சாந்தி வைபவத்திலும் மாலை 3.00 மணிமுதல் நடைபெறும் திறப்புவிழாவிலும் அடுத்தநாள் திங்கட்கிழமை விநாயகப் பெருமானுக்கு நடைபெறும் 1009 கலசாபிஷேகத்திலும் மணிமண்டபத்தில் நடைபெறும் மகேஸ்வரர் பூஜையிலும் (அன்னதானம்) கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெருஞ்சாந்தி வைபவத்தை ஈழத்திருநாட்டின் திருவருள் மிகுந்த ஆலயங்களின் பிரதம சிவாச்சாரியர்கள் நடத்தி வைப்பர்.

இலங்கையில் தலைசிறந்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் நடைபெறும்.

### மணிமண்டபத் திறப்புவிழா நிகழ்ச்சி நிரல்

காலம்: 09.05.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி . மணிமண்டபம் திறந்துவைத்தல்.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்

பூஜை வழிபாடு, திருமுறைபாராயணம்.

தலைவர்: செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்.

ஆசியுரை: சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக் குருக்கள்

(பிரதம குரு, இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் .

(முதல்வர் நல்லை ஆதீனம்)

*அன்னை சிவத்தமிழ்ச் செல்வி*

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவர்

(முதல்வர், நாகவரத நாராயண தேவஸ்தானம், அளவெட்டி)

வாழ்த்துரை: பேராசிரியர் சு.மோகனதாஸ்

(உபவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

பேராசிரியர் ஒப்புரவாளர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

(யாழ். பல்கலைக்கழகம்)

உயர்திரு. பொ.சி.வரதராஜா

நீதிபதி, மேல்நீதிமன்றம் யாழ்ப்பாணம்

பேராசிரியர் சபா ஜெயராஜா

(யாழ்.பல்கலைக்கழகம்)

கலாநிதி தி.கமலநாதன்

(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

. திருமிகு க.தேவராஜா

(தலைவர், வணிகத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

### நூல் வெளியீடு ஐங்கரன் அமிர்தம்

வெளியீட்டுரை: பேராசிரியர்: அ.சண்முகதாஸ்

(தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.)

மதிப்பீட்டுரை: கலாநிதி சி.சிவலிங்கராஜா

(யாழ்.பல்கலைக்கழகம்)

இசை நிகழ்ச்சி

திரு.எஸ்.குமாரசுவாமி

விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்

நன்றியுரை: திரு.இ.குகவரதன்.

சித்திரை 28 ஆம் நாள் (10.05.2004) திங்கட்கிழமை.

காலை 6.00 மணி விநாயகப்பெருமானுக்கு 1009 கலசாபிஷேகம்.

நண்பகல் 12.00 மணி புதிய மணிமண்டபத்தில் அன்னதானம்.

மாலை 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை,

விநாயகப் பெருமான் புதிய மணிமண்டபத்திற்கு எழுந்தருளி விஷேட பூஜை, பஞ்சமுகார்ச்சனை நடைபெறும்.

விசேட நாதஸ்வரக் கச்சேரிகள் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி இ.குகவரதன் தம்பதியர் லண்டன்.

திரு.திருமதி கு.கருணாமூர்த்தி தம்பதியர். லண்டன்.

(சி34732)(37-11-16)


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்வி வலயத்தில்
கணிதபாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும்
திரு.கி.சிவராசா அவர்களின் அன்பு மனையாள்

### திருமதி சிவராசா கிருஷ்ணதேவி

அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம்.
அவரது மறைவு எம்மைத் தாங்காத் துயரில் ஆழ்த்தியுள்ளது.
அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்கு கொள்வதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
வலயக் கல்வி அலுவலகம்
வடமராட்சி வலயம், புலோலி.

(34750)(37-11-16)

# தொழில்நுட்ப கல்லூரிக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,மே8

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு 8 லட்சம் ரூபா பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்களைத் தொழில் பயிற்சி மற்றும் தொழில்நுட்பக்கல்வி அமைச்சு வழங்கியுள்ளதாக தொழில நுட்பக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜா தெரிவித்துள்ளார்.

பெற்றோல் இயக்க, அமுக்க பரிசோதனைக்கருவி, எரிபொருள் பம்பி அமுக்கக் கருவி, காபன்சேர் வெற்றிட பரிசோதனைக்கருவி, இயந்திரத்தில் குளிரேற்றும் பரிசோதனைக் கருவி, இலத்திரனியல் பற்றரி பரிசோதனைக கருவி ஆகிய உபகரணங்களே வழங்கப்பட்டுள்ளன.

இவற்றினை கொழும்பிலிருந்து யாழ்.எடுத்துவருவதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அடுத்தவார முற்பகுதியில் இவைஇங்கு எடுத்துவரப் படவுள்ளன. (ஓ-ரி)

# உதைபந்தாட்ட அணியினருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,மே 8

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மன்னார், பள்ளிமுனை சென்.லூசியா அணி வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிறறுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெறவுள்ளது.

யாழ். மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறை மற்றும் யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை உதைப்பந்தாட்ட சங்கங்கள் ஆகியன நடத்தும் இந்த கௌரவிப்பு நிகழ்வில் காட்சிப் போட்டியாக மன்னார் பள்ளிமுனை சென்லூசியா விளையாடுக் கழகத்தை எதிர்த்து யாழ். குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.(ஓ-ரி)

# தேவை அறிந்து

(9ஆம் பக்கத்தொடர்ச்சி)

இருப்பிட வசதிகளையும் செய்து கொடுத்தல், வாழ்வாதாரத்திற்குத் தேவையான சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவற்றிற்கு உதவுபவர்களாகவும், அவர்களினால் செய்யாமல் விடப்படும் பகுதிகளில் அப்பேற்பட்ட சேவைகளை செய்பவர்களாகவும் சேவை புரிகின்றனர் (Auxiliaries). இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் (Sri Lanka Red Cross Society) எமது நாட்டில் தேசிய சங்கமாக விளங்கி 1936ஆம் ஆண்டில் இருந்து தற்பொழுது வரை சேவையாற்றி வருகிறது. இதன் தலைமையகம் கொழும்பில் உள் ளது. ஒரு நாட்டில் ஒரு தேசியசங கமே (One National Society) இயங்க முடியும் ஆனால், தேவைக்கு ஏற்ப கிளைகளை ஸ்தாபித்து இயக்கலாம். அதற்காக யாப்பு ரீதியாக அங்கீகாரம் அங்கத்தவரிடம் பெறப்பட வேண்டும். எமது நாட்டில் 25 மாவட்டங்களிலும் கிளைகள் அமைக்கப்பட்டு இயங்குவதனால் சிறப்பாக சேவையாற்ற முடிகிறது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினர் ஆற்றும் பணிகள் சில பின்வருமாறு:-

தேசிய வைபவங்கள், சமய மற்றும் விளையாட்டு நிகழ்வுகளின்போது முதலுதவி அளித்தலும், அரசாங்க /தனியார், செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவர்கள் / தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு முதலுதவிப் பயிற்சியளித்தல், அனர்த்தங்கள் நடைபெறும்போது உதவுதல், அவசர அம்புலன்ஸ் சேவை/நடமாடும் மருத்துவ சேவை, கடிதச்சேவை/ காணாமல் போனோரைத் தேடுதல், நிவாரண உதவிகளை வழங்குதல், இரத்ததான நடவடிக்கை, ஆரம்ப சுகாதார சேவை, சிரமதானப் பணிகள், சுயதொழிலுக்கான பயிற்சி வழங்கலும், தொடர் நடவடிக்கைகளும்.

உலகலாவிய ரீதியில் சேவையாற்றும் செஞ்சிலுவை, செம்பிறை இயக்கத்தின் வேலைத்திட்டங்களை இன்றைய தினம் நினைவு கூர்ந்து சேவைசெய்வோமாக.


## படிவம்

அரச துறைகளில் பொருத்தமான பதவிகளில் நியமிப்பதற்காகத் தகுதி வாய்ந்த - வேலையற்ற பட்டதாரிகள் விண்ணப்பிப்பதற்கான படிவம் விற்பனையாகின்றது.

முடிவு திகதி: 20.05.2004

BHARATHI PATHIPPAKAM
Offset Printers
430, K.K.S. Road, Jaffna. (C/34747)



## யுவதிகளுக்கு அரிய சந்தர்ப்பம்

சுயதொழில் முயற்சிக்கான


### தொடக்கம்.....

கொழும்பு கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் இருந்து வருகை தந்துள்ள அழகுக்கலை நிபுணர் திருமதி லலித்தா அளவத்தவினால் கடந்த 5 தினங்களாக வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட சாறி, சாறி பிளவுஸ், பஞ்சாபி வேலைப்பாடுகளை தொடர்ந்து - இன்று முதல் 12.05.2004 வரை முத்து ஆபரண வேலைப்பாடுகளும், 13.05.2004 முதல் 17.05.2004 வரை துணியிலான பொம்மை அலங்கார வேலைகளும் இடம்பெறவுள்ளன. (C/34745)

தொடர்புகளுக்கு :- யாழ் சமூக செயற்பாட்டு மையம்.
இல.159.4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).
தொலைபேசி இல. 021 222 3699


## நீங்கா நினைவில் ஆண்டு நான்கு

மண்ணில் 14 – 07 – 1930



விண்ணில் 22 – 04 – 2000

### அமரர் சின்னத்துரை சோமசேகரம்

(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.மாநகரசபை)

திதி:08-05-04 (சங்கடஹர சதுர்த்தி)

ஆண்டுகள் நான்கு ஆனாலும்,
உங்கள் நினைவுகள் ஆறாது!
எந்நாளும் உங்கள் நினைவுடன்
வாழுகின்றோம் ஐயா!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவில் வாழும்,
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*39/2, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (31742)(42-11-16)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவன் மார்க்கண்டு



நாராயண R.D.S. வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவன் மார்க்கண்டு அவர்கள் நேற்றுமுன் தினம் (06.05.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாராயண R.D.S. வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (31723)(34-11-16)

தகவல்:
பிள்ஷளகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

### முத்துக்கிருஷ்ணர் ·கோபாலபிள்ளை



புளியங்கூடல் முத்துக்கிருஷ்ணர் கோபாலபிள்ளை 05-05-2004 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்கிருஷ்ணர்-செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை-இளையபிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும் காலஞ்சென்ற சுந்தரலெட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, தில்லையம்மா, குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சண்முகம் மற்றும் நீலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் வேதசிரோன்மணி, விஜயசிரோன்மணி, ஸ்ரீலசிரோன்மணி, வசந்தசிரோன்மணி, வசந்தராஜன் ஞானசிரோன்மணி, வரதசிரோன்மணி, குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியதர்மபாலா, குணலிங்கம், சண்முகரெட்னம், காஞ்சனா, தேவசுந்தரம் மனோகரன், மதியழகன் ஆகியோரின் அருமை மாமனாரும் கஜன், நியுந்தன், புகழ்யன், லக்சன், விதுசன், தனுசன், தர்சிகா, மேகலா, தர்சினி, பிரவினன், சோபிகன், சகானா, பிரவணன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-05-2004) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.* (31740)(43-11-16)

தகவல்:
கோ.வசந்தன் (மகன்)

### திருமதி விமலச்சந்திரன் சுகந்தினி (வசந்தி)

கலைமகள் வீதி, தையிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை இருப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலச்சந்திரன் வசந்தி 04.05.2004 அன்று பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் விமலச்சந்திரன் (முன்னாள் ஊழியர், C.T.B. கோண்டாவில், வவுனியா) அவர்களின் அன்புத் துணைவியாரும் அபிநாத், ஆருந்த் ஆகியோரின் அன்புத் தாயாரும் மற்றும் திரு.திருமதி நடராஜாவின் மகளும், திரு.திருமதி கந்தையாவின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (10.05.04) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி வீதி,*
*ஆனைக்கோட்டை.* (31743)(42-11-16-37)

தகவல்:
க.ரவிச்சந்திரன்.

## நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில் டொல்பி ஒலி அமைப்புடன்

விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த




(C34180)(22)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதித் திகதி வரை நுழைவுச்சீட்டுக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 3அதிஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க பரிசுகள்

1) துவிச்சக்கரவண்டி
2) C.D பிளேயர்
3) மேசை மின்விசிறி

ஆசனப் பதிவுகளுக்கு:
நாகம்ஸ் பாட்டா சுன்னாகம், நாகம்ஸ் சினிமா.


# ஓடும் பஸ்ஸிலிருந்து இறங்கிய பெண் கீழே வீழ்ந்து காயம்!

தென்மராட்சி,மே8

பஸ்நிலையத்திலிருந்து புறப்பட்ட பஸ்ஸிலிருந்து இறங்க முற்பட்ட பெண் கீழே வீழ்ந்து படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

பஸ்ஸினுள் ஏறிய இப்பெண் பஸ் புறப்படும் போது - கீழே வைத்து விட்டு வந்த பையை எடுப்பதற்காக திடீரென கீழே இறங்க முற்பட்டார் என்றும் -

அப்போது நிலை தடுமாறிக் கீழே வீழ்ந்து காயமடைந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த வினாசி வள்ளி (வயது 66) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்தார். அவர் சாவகச்சேரி ஆஸ பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

முகமாலையிலிருந்து வந்த மேற்படி பஸ் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டது.

(ஒ-6-117)


## விற்பனைக்கு

கோண்டாவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள 8 1/2 பரப்புக் காணியுடன் கூடிய அழகான மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

சிறி அமலா ஜுவலர்ஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0777-730567

(சி-34754)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 04 07 1933 — மறைவு 08 04 2004



### அமரர் நாகமுத்து சின்னத்தம்பி

*அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாக வாழ்ந்தீர்!*
*நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு மறையாது*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

இன்று (08.05.2004) சனிக்கிழமை காலை புனித கீரிமலை தீர்த்தக் கரையில் அந்தியேட்டி கிரியைகளும், வீட்டுக்கிருத் திய நிகழ்வுகள் மு.பகல் 11மணியளவில் சுதுமலையிலுள்ள அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும். இந்த அந்தியேட்டி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
மறவன்புலம்,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
எச்சாட்டி வயிரவர் கோயிலடி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(31761)(16-18-36)


## நிரஞ்சனாஸ் சங்கானை

கமல், அபிராமி, நெப்போலியன் நடித்த



விருமாண்டி

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு (பு.நே.)
HELL BOUND
HELL RAISER PART 2 (பயங்கரப் படம்)

(சி-34430)(12)

## லக்சுமி இணுவில்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

சூர்யா (2 வேடங்கள்), ஜோதிகா நடித்த மிகப் பிரமாண்டமான தயாரிப்பில்



பேரழகன்

தினசரி 4 காட்சிகள் (ரீலஸ்)

ஆசனப் பதிவுகளுக்கு: இணுவில் - லக்சுமி சினிமா
யாழில் : செல்வா மினி

## ராஜா யாழ்ப்பாணம்

தாவளவது வெற்றி வாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



கில்லி

(ரீலஸ்) 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(C34517)(22)

## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7163877 முதல் 7171657 வரை
சீட்டிழுப்பு இல. 30 திகதி 06-05-2004

வெற்றி எண்கள் **8 8 0 7 1 3** சுப்பர் எண் **22**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,87,29,950/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | [illegible] | [illegible] | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| [illegible] | - | 1,87,29,950/- | - |
| [illegible] | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| [illegible] | 06 | 50,000/- | 3,00,000/- |
| [illegible] | 66 | 5,000/- | 3,30,000/- |
| [illegible] | 673 | 500/- | 3,36,500/- |
| [illegible] | 6,649 | 50/- | 3,32,450/- |
| [illegible] | 65,962 | 10/- | 6,59,620/- |
| [illegible] | 09 | 5,000/- | 45,000/- |
| [illegible] | 62 | 1,000/- | 62,000/- |
| [illegible] | 671 | 100/- | 67,100/- |
| [illegible] | 6,587 | 20/- | 1,31,740/- |
| [illegible] | 80,686 | | 32,64,410/- |

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,89,15,025/-

7168413-5-14
7171024-1-62
7171073-8-88
7170117-5-30
7166170-0-07


பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## முக்கிய அறிவித்தல்

மானிப்பாய், பிரதான வீதி, மாப்பியன் மில்லுக்கு அருகில் அமைந்துள்ள கட்டப்பாளி அல்லது வளந்தில் என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு 6 உம் குளி 4.35 உம் விஸ்தீரணம் கொண்ட காணி சின்னையா மகள் கமலா தேவி ஆகிய எனக்கு உரியதென்றும் இந்தக் காணிக்கு வேறுயாரும் உரிமை கோரவோ, விற்கவோ முடியாது என்பதையும் இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றேன்.

**சின்னையா கமலாதேவி**
262, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(31752)(30-36-16-18)

## இறை இரக்கத்திற்காக வழிபாடு

### இரத்தினம் ஜெயசீலன்

(ஆசிரியர் - பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கடந்த 02.05.2004 அன்று நெடுந்தீவுக் கடலில் பயணிக்கையில் காணாமற்போன இரத்தினம் ஜெயசீலன் அவர்களுக்காக இறை இரக்கம் வேண்டியும் தெளிவான செய்தி வழியாக ஆறுதல் பெறவேண்டியும் இன்று (08.05.2004) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் இறை வழிபாடு நடைபெறும்.

இவ் வழிபாட்டில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*45/37, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

(31756)(30-16-18-36)

## துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி மாணவி சி.தர்மிளா அவர்களின் தாயும் கல்லூரியின் கணிதத்துறை விரிவுரையாளர் திரு. கிருஷ்ணயோகன் அவர்களின் தங்கையுமாகிய

### சிவராசா கிருஷ்ணதேவி

அவர்கள் 06.05.2004 அன்று காலமானார்.

அன்னாரின் மறைவினால் கலங்கிநிற்கும் குடும்பத்தவர்களுக்கு யாழ்ப்பாணத் தேசியக் கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர் சமூகம் தனது கண்ணீர்க் காணிக்கையை நிவேதித்து அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
உள்ளகப் பயிற்சி ஆசிரியர் சமூகம்.

(31759)(30-36-16-18)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சின்னத்தம்பி (பெரியதம்பி)

கச்சாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி 06.05.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும் இராசையாவின் அன்புச் சகோதரரும் ஆறுமுகம் (கனடா), சீவரத்தினம், ருக்குமணிதேவி, றஜனிதேவி(ஜேர்மனி), குகேந்திரன்,ரவீந்திராதேவி ஆகியோரின பாசமிகு தந்தையாரும் யோகாம்பிகை (கனடா), செல்லம்மா, ஜெயசிங்கம், குலசிங்கம் (ஜேர்மனி), பிறேமாவதி, யோகராசா ஆகியோரின் மாமனாரும சுதாகரன் (கனடா), சுதாஜினி (நிருபரன்), சுகந்தினி (பிறேமசீலன்), சுதர்சன் (கனடா), சுஜந்தன் (கனடா), அஜிகரன் (யாழ்.பல்கலைக்கழகம் 3 ஆம் வருடம்), சசிகரன், சிவகரன், சுவிகரன், சுபாகரன், செல்வராஜி, செல்வநிதி, ஜெயரவிலன், கயல்விழி, நிரஞ்சினி, டினேகா, சிந்துஜா, நியூஷா, வினுஷன் (ஜேர்மனி), சுருதி (ஜேர்மனி), அபர்ணா (ஜேர்மனி), கேனுஷா, புஜிதா, ருமிலன், யோகரஞ்சினி, துர்சினி,ஜெனார்த்தனன், ஜெனருபன்,ஜெனீபன் ஆகியோரின் பேரனும் லக்ஷன் என்பவரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2004) சனிக்கிழமை மு.ப.11.மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொப்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் வடக்கு,*
*கொடிகாமம்.* (சி-34755) (36-16-18)

தகவல்:
பிள்ளைகள்.

### சோமநாதன் தினகரன்



வண்ணார்பண்ணை, சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமநாதன் தினகரன் அவர்கள் கடந்த 6.5.2004 வியாழன் இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமநாதன் - இராசமணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் குமுதினி (பிரான்ஸ்), றஜனி (ஜேர்மனி), துஷிகரன் (பிரான்ஸ்), மயூரன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும் முருகதாஸ் (பிரான்ஸ்), றாஜ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் டினேஜ், நிவேதா ஆகியோரின அன்புப் பேரனும் திலகவதி ரவீந்திரன் (S.K.), ரூபாவதி (யா.இ.ஆ. பாடசாலை), கருணாவதி, கலாவதி (யா.இ.ம.கல்லூரி), நந்தாவதி (ஜேர்மனி), சுவேந்திரன் (ஸ்ரீ சைக்கிள் வேக்ஸ்), தயாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பூமலரின் உடன்பிறவாச் சகோதரனும் காலஞ்சென்ற அமரசிங்கம் (P.M.), நகுலேஸ்வரி கிருஷ்ணபாலா (முன்னாள் ஆசிரியர்), குலநாயகம் (தபால் ஊழியர்), பூலோகசிங்கம், பஞ்சலிங்கம் (ஜேர்மனி), இராஜஸ்ரீ, சத்தியநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற மங்கயர்க்கரசி, பரமேஸ்வரி, சண்முகநாதன், சர்வேஸ்வரி, சற்குணநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 10.05.2004 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

94,சிவன்கோயில் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (31757)(36-18-16)

தகவல்:-
தி.இராஜேஸ்வரி (மனைவி).

# லண்டன் கோயிலில் வைத்து நையப்புடைக்கப்பட்ட பக்தர்

## 3 பூசகர்கள், பெண் உட்பட ஐவர் கைது

மேற்கு லண்டனில் உள்ள சைவ ஆலயம் ஒன்றில் வழிபாட்டுக்குச் சென்ற இலங்கைத் தமிழர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றார். லண்டன் தமிழர்களைப் பரபரப்புக்குள்ளாக்கியுள்ள இச்சம்பவம் கடந்த வாரம் லண்டன் எட்ஜ்வெயர் என்ற நகரில் அமைந்துள்ள ஸ்ரீ காயித்திரி மாதா திருக்கோயிலில் நடந்துள்ளது.

நாற்பது ஆண்டுகாலமாக லண்டனில் வாழ்ந்து வரும் இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான - அறுபது வயதான - இந்தப் பக்தர் தனது தந்தையின் ஆத்மசாந்திக்கு மோட்சார்ச்சனை செய்வதற்காகக் குறிப்பிட்ட கோயிலுக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் இருபது பவுண்களைக் கொடுத்து மிகுதிப் பணத்தைக் கேட்டபோது பக்தருக்கும் அங்கு அர்ச்சனைக்காகப் பணம் வாங்கியவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டிருக்கிறது. மிகுதிப் பணம தருகிற பழக்கமில்லை என்று அவர் சொல்ல, வேறு கோயில்களில் அப்படி இல்லை என்று பக்தர் சொல்ல, இப்படியே வாக்குவாதம் நீடித்தது.

அங்கு பூசை செய்கின்ற அந்தணர்களுடன் இன்னொருவரும், கோயில் நிர்வாகியும் சேர்ந்து அவரை அடித்து, உதைத்து அறையொன்றுக்குள் இழுத்துச் சென்று மோசமாகத் தாக்கிக்கொண்டிருந்ததைக் கண்ட வேறு பக்தர் ஒருவர், பொலீஸாருக்குக் கைத்தொலைபேசி மூலம் தகவல் கொடுத்திருக்கிறார். அடுத்த சில நிமிடங்களில் பொலஸ பாய்ந்து வந்து அறைக்குள் நுழைந்து தாக்கிக்கொண்டிருந்தவர்களைக் கையும் மெய்யுமாக அப்பிக்கொண்டு மேற்கு லண்டன் பொலீஸ் நிலையத்துக்குச் சென்றது. இரத்தம் சொட்டச் சொட்டக் கை முறிந்து துடித்துக்கொண்டிருந்த பக்தர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஒரு பெண் உட்பட கோயில் நிர்வாகியும் பூசகர்களுமாக ஐவர் கைதாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளானவரை உரிய நேரத்தில் பொலீஸார் அங்கு சென்று மீட்டிருக்காவிட்டால் மோசமான நிலை ஏற்பட்டிருக்கலாமென்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அவருக்கு அவசர சிகிச்சையும் செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டிலிருந்து வந்து சாத்திரம் கூறி பெருவாரியான பணத்தைச சேர்த்துக்கொண்ட கணவன் -மனைவியான நடுத்தர வயதான தம்பதியரே, சில வருடங்களுக்கு முன்னர் இக்கோயிலை ஆரம்பித்து நடத்திவருகின்றனர்.

பொலீஸ் விசாரணையில் இவர்கள பற்றிப் பல திக்கிடும் தகவல்கள் வெளியாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

தன்னை ஒரு டாக்டர் என்று சொல்லிக்கொண்டு லண்டனுக்கு வந்தவர் தனது மனைவியிடம் அபாரசக்தி இருப்பதாகவும் சாத்திரம் மட்டுமல்ல, தீராத நோயையும் தீர்க்கமுடியாத குடும்பப் பிரச்சினைகளையும் தனது மனைவியால் தீர்க்க முடியும் என்றும் வானொலி, பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி, பல நூறாயிரம் பவுண்களைக் கடந்த பத்தாண்டுகளில் சேர்த்துள்ளார். இப்போது கடை, பத்திரிகை, கோயில்; காப்புறுதி என்று பல வியாபாரங்களை இவர் செய்து வருவதும் அம்பலத்துககு வந்துள்ளது என்று கூறப்படுகிறது.

# தன்னாமுனைப் படுகொலை குறித்து கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு

மட்டக்களப்பு,மே8

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மட்டக்களப்பு தன்னாமுனையில் பட்டப்பகலில் தமது போராளிகள் இருவர் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிடம் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை முறைப்பாடு செய்துள்ளது. தன்னாமுனைச் சம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட பகலவன் எனப்படும் சிவாநந்தம் ஸ்ரீமுரளி, வதனன் எனப்படும் தாமலிங்கம் விஸ்வநாதன் ஆகிய விடுதலைப் புலிப் போராளிகளின் வித்துடல்கள் மரண விசாரணையின் பின்பு உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த வித்துடல்கள் மட்டக்களப்பு கரடியனாற்றில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நொச்சிமுனையைச் சேர்ந்த பகலவனின் வித்துடல் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும் என்றும், கிளிநொச்சியைச் சேர்ந்த வதனனின் வித்துடல் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (8-9)

# வவுனியாவில் மீள்குடியமர்வு பற்றி படைத்தளபதியுடன் எம்.பி. பேச்சு

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக வன்னி இராணுவத தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரியவை தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் இரணை இலுப்பைக்குளம், கோவில்புளியங்குளம், குஞ்சிக்குளம், செங்கப்படு, வேலங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த அனுமதி வழங்குமாறு அவர் கோரிக்கை விடுத்தார். குறைந்த பட்சம், அவர்களை தமது கிராமத்தை பார்வையிடுவதற்கேனும் அனுமதிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த இராணுவத தளபதி கூறுகையில் - மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக பின்னர் ஆராயப்படும் என்றும் முதலில் மக்கள தங்கள் கிராமங்களைப் பார்வையிட அனுமதிப்பது தொடர்பாகத் தனக்கு எழுத்துமூலம் அறிவிக்குமாறும் - கேட்டுக்கொண்டார் என்று சிவநாதன் கிஷோர் தெரிவித்தார். (ஐ-9-164)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் செல்லவிரும்புகிறார்களா? அல்லது மாற்று ஏற்பாட்டை விரும்புகிறார்களா? என்பது குறித்து அறிவதற்காக இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.

கடந்த வாரம் இலங்கை வந்திருந்த அகதிகளுக்கான ஐநா.தூதரக கண்காணிப்பு மா அதிபர் மக்னமாரா ஜனாதிபதியையும் சந்தித்திருந்தார்.

அடுத்த ஆறு மாதகாலத்துக்குள் அகதிகளை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர நடவடிககை எடுக்கப்படவிருக்கிறது. வழங்கவேண்டும் என்று அப்போது ஜனாதிபதி அவரிடம் கோரியிருந்தார் என்று தெரிய வருகிறது.

(ஐ-3)

## வேலையற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட்டவராக இருக்கவேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைப் பிரதேச செயலகங்களில் பெற்றுப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலகங்களிடம் கையளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஒரு தினத்தில் பிரதேச செயலரால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படும்.

இந்த வேலைவாய்ப்புத் தொடர்பாக நிதி அமைச்சு அறிவித்துள்ள போதும் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு நேற்று மாலைவரை இது தொடர்பான விவரங்கள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## சடலங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவானந்தன் - ஸ்ரீமுரளியின் வித்துடல் மட்டக்களப்பு கல்லடியிலுள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது.

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று மாலை பூரண இராணுவ மரியாதையுடன் வித்துடல் விதைக்கப்படவுள்ளது.

நிதர்சன் என்று அழைக்கப்படும் தர்மரத்தினம் - விஸ்வநாதனின் வித்துடல் வன்னி உருத்திரபுரத்திலுள்ள இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-9)

## தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்ட அவரும் துணைவியாரும் காலை 8 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்பு அலுவலகப் பொறுப்பாளர் சந்துருவும் அவர்களுடன் கூட வந்திருந்தார்.

பாலசிங்கம் தம்பதியரை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதித்துறைப் பொறுப்பாளர் பரராஜசிங்கம் ஆகியோர் கிளிநொச்சி நகர விளையாட்டு மைதானத்தில் அவர்களது ஹெலி இறங்கிய சமயம் அங்கு வரவேற்றனர்.

ஹெலியை விட்டு இறங்கிய பின்னர் செய்தியாளர்களுடன் சிறிது நேரம் உரையாடிய பாலசிங்கம் பின்னர் உடனடியாகப் புறப்பட்டு தலைவர் பிரபாகரனைச் சந்திக்கச் சென்றார்.

(ஐ-3-7-9)



நேற்றுக் கிளிநொச்சியில் வந்து இறங்கிய அன்ரன் பாலசிங்கத்தை தமிழ்ச்செல்வன் வரவேற்கிறார்.

# இளைஞர் கைது!

பிரசவித்த சிசுவைக் கழிவறைக்குள் கைவிட்டுத் தப்பிச்சென்ற மாணவி, கர்ப்பமடைவதற்குக் காரணமாக இருந்தவர் எனச் சந்தேகிக்கப்படும் நபரை யாழ். பொலீஸார் நேற்றுக் கைதுசெய்திருக்கின்றனர்.

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இந்த இளைஞரை, பிரஸ்தாப மாணவி கொடுத்த தகவலின் அடிப்படையில் யாழ் பொலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் இன்று நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார் என யாழ். பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-9-7)

# துப்பாக்கியுடன் முஸ்லிம் வியாபாரி கைது!

மட்டக்களப்பு காத்தான்குடியில் 9 எம்.எம் ரக கைத்துப்பாக்கி மற்றும் அதற்கான ரவைகள் என்பவற்றை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் முஸ்லிம் வியாபாரி ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

ராவூத் - நம்பி - பௌசி அமீர் என்ற குறிப்பிட்ட சந்தேகநபரை நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பொலீஸார் ஆஜர்செய்தனர். சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ-7-9)

# வல்லைப்பாலம் தற்காலிகமாக திருத்தப்பட்டது

யாழ்ப்பாணம், மே8

இடிந்துவிழும் நிலையிலிருந்த வல்லைப்பாலம் தற்காலிகமாகத் திருத்தியமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு வழிசமைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிக்கான பிரதான போக்குவரத்து வீதியில் அமைந்துள்ள வல்லைப்பாலம் மிகவும் மோசமாகச் சேதமடைந்தமையினால் அவ்வழியூடான வாகனப் போக்குவரத்து எந்தநேரமும் தடைப்படும் அபாய நிலை ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து, கற்கள் நிரப்பப்பட்ட 'பரல்'களைக் கொண்டு பாலம் தற்காலிகமாகச் சீர்செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச் சீரமைப்புப் பணிகள் காரணமாக அவ்வழியூடான போக்குவரத்துகள் சுமார் 30 நிமிடங்கள் வரை தடைப்பட்டன

இதேவேளை -

வல்லைப்பாலத்தின் நிலைமை தொடர்பாக அறிவதற்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பிரதேச பொலீஸ் பொறுப்பதிகாரி தர்மதாஸா, தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் மற்றும் அப்பகுதி கிராமசேவையாளர் போன்றோர் பாலத்தைப் புனரமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

(ஐ-9-15)


இப்பொழுது விற்பனையில்
கம்பியூட்டர் டுடே
ஏப்ரல், 2004, இதழ்
மருத்துவத்துறையில் இணையம்
-ஆய்வுக்கட்டுரை
தூள் கிளப்பும் கூகிள்
கணினித் திருடர்கள் !!!
சிறு வயதிலேயே கணினிக் கல்வி
'ழ' கணினி கை கொடுக்கிறது
பொதுத் தகவல்த் தொழில் நுட்பம்
ரிலாக்ஸ் மாஸ்டர்
இன்னும் பல விடயங்களுடன்...
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்
'உதயன்' முகவர்களிடமும்,
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
★ சந்தாதாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
★ முன்னைய வெளியீடுகளும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: (சி-34746) (30-16-18)
விநியோகப்பகுதி
'உதயன்' பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



மீண்டும் சாவகச்சேரியில், ஊரெழுவில்.
A/L தமிழ 2005, 2006
அதிக பயிற்சி வகுப்புகள
திரு.நாக.தமிழிந்திரன்
1. இல.28 டச்றோட், சாவகச்சேரி.
(ENGLISH ACADEMY)
ஆரம்பம்:- 10.05.04 திங்கள்,
11.00 - 2005
12.00 - 2006
2. தேவபவனம் ஊரெழு (பாடசாலையின் வடக்கே)
ஆரம்பம்:- 10.05.2004 2.00- 2005
3.00- 2006
NOTE:-
1) 09.05.2004 இற்கு முன் பதிவு செய்யவும்.
2) பிந்திய பதிவுகளுக்குச் சலுகைகள் இல்லை.
3) திருவடி சூட்டுப்படலம் வினாவிடைத் தொகுப்பு வகுப்புகளிலும் பிரபல புத்தக சாலைகளிலும் கிடைக்கும்.
(31775)(38-16-18-30)



A/L 06 LOGIC
★ எடுப்புக்கள் ★
சனி, ஞாயிறு காலை 9 மணி
A/L 05 LOGIC
★ பகுதி II ★
(விஞ்ஞானமுறை)
பகுதி IIஐ முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு ஆரம்ப வகுப்புகள் முக்கியம்.
ஆரம்பம்
ஞாயிறு 7 மணி.
ஆசிரியர்
எஸ்.எஸ். மனோகரன்
BEACON
யாழ்நகர்.
(31735)(40)



நந்தன் அக்கடமி
கண்டி வீதி சாவகச்சேரி
கணக்கீடு - S.சயந்தன்
2005 பங்குடமை
Sat, Sun - 3.30 - 5.30
2006 புதிய பிரிவு
Sat, Sun - 5.30 - 6.30
பொருளியல் - M.விக்கி
ஆரம்பம்:- 08.05.2004 சனி
(31748)(38) - நிர்வாகம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.